

அரசியல்
# சூரியன்
புலனாய்வு மாத இதழ்
ARASIYAL SURIYAN
ISO 9001:2015 CERTIFIED MAGAZINE
மலர்:3 / இதழ்: 1 / ஜுன் 2024 / தமிழ், ஆங்கில மாத இதழ்/ Volume: 3 / Issue: 1 / June 2024 / Tamil, English Monthly




## மக்களவை தேர்தலில் நாயகனான தேர்தல் ஆணையம்!



## 100% வெற்றியுடன் "சூப்பர் ஹீரோ ஸ்டாலின்" தமிழகத்தில் திமுக கூட்டணி 40/40



## தருமபுரியில் சட்டவிரோதமாக 'கருக்கலைப்பு' மையமாக செயல்படும் தனியார் மருத்துவமனை

ரூ.15/-

# மோடியின் மூன்றாம் கிரீடம்!



நாட்டின் 18 வது மக்களவைத் தேர்தல் முடிவுக்கு பின்னால் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக 09062024 மாலை 7:15 மணியளவில் நாட்டின் 18 வது மக்களவையின் பிரதம மந்திரியாக மோடி அவர்கள் பதவி ஏற்றுக்கொண்டார். அவருடன் அமித்ஷா, ஜே. பி. நட்டா, நிதின் கட்கரி, ஜெய்சங்கர், நிர்மலா சீதாராமன், எல்.முருகன் உட்பட 71 மந்திரிகள் பதவி ஏற்று கொண்டனர்.

இவர்களில் மோடி உள்ளிட்ட 30 பேர் கேபினட் அமைச்சர்கள், ஐந்து பேர் தனி அமைச்சர்கள், 36 பேர் இணை அமைச்சர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அமைச்சரவையில் 70 பேர் பாரதிய ஜனதா கட்சி சார்ந்தவர்கள் மீதமுள்ள 11 கூட்டணி கட்சி சார்ந்தவர்களாவர். இதில் ஆறு பேர் பெண் அமைச்சர்கள் என்பது கூடுதல் செய்தி.

இவர்களுக்கு மாண்புமிகு ஜனாதிபதி துரோபதி அவர்கள் பதவி பிரமாணமும், ரகசிய காப்புபிரமாணமும் செய்து வைத்தார். இந்த பதவியேற்பு விழாவில் மாலத்தீவு அதிபர் முகமது முய்சு, வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால் ‘பிரசந்தா’, இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கே, மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத், பூடான் பிரதமர் வைஸ் டோப்கா செஷல்ஸ் அதிபர் அஹ்மத் அஃபிஃப் ஆகிய வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு பிரதமர் மோடிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# அரசியல் சூரியன்

தமிழ் ஆங்கில மாத இதழ்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்

**K.மணிகண்டன் B.Com.,**

**Mobile: 90253 05909**



*உதவி ஆசிரியர்கள்*

குளித்தலை A.அலாவுதீன் / M.முனியம் சிவ சண்முகம்

*சிறப்பு ஆசிரியர்கள்*

A.சுந்தரம் / ஜான் சாமுவேல்

*தலைமை நிருபர்கள்*

T.N.மகேந்திரகுமார் / R.உதயகுமார்

P.பாலகங்காதரன் / M. அசோகன் B.Com., LLB.,

*மாவட்ட நிருபர்கள்*

அம்மையப்பன் / G.விமல் K.கனகராஜ் / A.மாரியப்பன்

AG ஏழுமலை / K. சரவணன் D.ராஜேஷ் / K. செந்தில்குமார்

சுகுமாறன்

*சிறப்பு நிருபர்கள்*

M. ஜெயந்த்குமார்

*நிருபர்கள்*

B.வெங்கடேஷ்
R.தங்கபாண்டியன்
Y.சேக் பரீத்
A.நேதாஜி
S.மஜார்
K..ரவீந்திரன், மத்தியசென்னை
V.கனகசபாபதி
Y.ஆம்ஸ்ட்ராங் தென்சென்னை
A.அருண்குமார்
S.ரவி
முகமது ரஃபீக்
S.நவீன்குமார்
P.ரமேஷ்
P.ராமர்
G.சக்திவேல்
A.சூரியநாகராஜ்
C.தங்கவேல்
திராவிடமணி
N.மணிவண்ணன்

*சட்ட ஆலோசகர்*

ஜெயம் இ.புஷ்பராஜ் B.A.,B.L., / KTV பிரபு B.A., LLB.,

வேல்முருகன் M.A., B.L., / சபரிகீதன் M.A., B.L.,



98/1, Vijayamangalam Road, Hospital Road,
Utthukuli, Tiruppur - 638751.
E-mail: arasiyalsuriyan77@gmail.com
webside: www.arasiyalsuriyan.com


## அரசியல் சூரியன் மாத இதழின் அறிவுறுத்தல்

அரசியல் சூரியன் மாத இதழில் இணைந்துள்ள நிருபர்களோ மற்ற பொறுப்பு வகிப்பவர்களோ, எந்த உள்நோக்கத்துடனும் சுயலாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும் மீறி செயல்படுபவர்கள் நீக்கப்படுவார்கள். மற்றும் சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கப்படும். -நிர்வாகம்.

*ஆசிரியர் / வெளியீட்டாளர்:* **K.மணிகண்டன் B.Com.,**

இதழின் அனைத்து வழக்குகளும் சென்னை பெருநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.


**பாராளுமன்ற தேர்தல் - தலைவர்கள் கருத்து**
→ பக்கம் : 7

**ஓரியைத் தேடி ஓர் பயணம்....**
→ பக்கம் : 10

**தர்மபுரி பாராளுமன்றம்! ஒரு பார்வை!!**
→ பக்கம் : 13

**ஜெயலலிதா குறித்து அண்ணாமலை கூறுவது அவருடைய அறியாமையை காட்டுகிறது: சசிகலா**
→ பக்கம் : 14

**கடமையை தட்டிக் கழிக்கும் காவல்துறை!**
→ பக்கம் : 15

**இளம் சிறார்களிடையே மிகுதியாகும் குற்றச்செயல்கள்!**
→ பக்கம் : 16

**சொல்லியதை மட்டுமல்ல; சொல் லாததையும் செய்யும் முதல்வர் மு.க.ஸ்டாலின்: தமிழக அரசு பெருமிதம்**
→ பக்கம் : 19

**மக்கள் நீதி மய்யம் கட்சியின் எதிர்காலம் என்ன?**
→ பக்கம் : 21

# மக்களவை தேர்தலில் நாயகனான தேர்தல் ஆணையம்!

நாடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்த நாட்டின் 18 வது நாடாளுமன்றத் தேர்தல் திருவிழா ஒரு வழியாக முடிந்து விட்டது.

ஏழு கட்டங்களாக நடந்த இந்த தேர்தலில் 8390 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். இவர்களில் 543 பேரை நாம் தேர்ந்தெடுத்து ஜனநாயக கடமையை சிறந்த முறையில் ஆற்றி இருக்கிறோம்.

புதிய நாடாளுமன்றத்தைத் தேர்வுசெய்வதற்கான அறிவிப்பு, இந்த ஆண்டு மார்ச் 16ஆம் தேதி இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டது.

அதன்படி, இந்தத் தேர்தல்கள் ஏழு கட்டங்களாக நடந்தன. ஏப்ரல் 19ஆம் தேதி 102 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 26ஆம் தேதி 89 தொகுதிகளுக்கும் மே 7ஆம் தேதி 94 தொகுதிகளுக்கும் மே 13ஆம் தேதி 96 தொகுதிகளுக்கும்மே20ஆம்தேதி49தொகுதிகளுக்கும் மே 25ஆம் தேதி 57 தொகுதிகளுக்கும் ஜூன் 1ஆம் தேதி 57 தொகுதிகளுக்கும் தேர்தல்கள் நடந்தன.

இந்தியாவில் பிப்ரவரி 8ஆம் தேதி நிலவரப்படி 96 கோடியே 88 லட்சத்து 21 ஆயிரத்து 926 பேர் வாக்காளர்களாக உள்ளனர். இவர்களில் ஆண் வாக்காளர்கள் 49,72,31,994. பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 47,15,41,888. மூன்றாம் பாலினத்தவர் 48,044. புதிய பாராளுமன்றத்தை தேர்ந்தெடுக்க கடமையாற்றியவர்கள்

இதில் வேறு சில சுவாரஸ்யமான புள்ளிவிவரங்களும் இருக்கின்றன. இந்தியாவில் உள்ள வாக்காளர்களில் 100 வயதைக் கடந்தவர்களின் எண்ணிக்கை 2,38,791. பதினெட்டுமுதல்பத்தொன்பது வயதுக்குட்பட்ட முதல் முறை வாக்காளர்களின் எண்ணிக்கை 1,84,81,610. அதேபோல, இந்திய மக்கள் தொகையில் 66.76 சதவீதம் பேர் வாக்காளர்கள்.

தமிழ்நாட்டைப்பொறுத்தவரைமொத்தவாக்காளர்களின் எண்ணிக்கை 6.19 கோடி. இவர்களில் ஆண்களின் எண்ணிக்கை 3.04 கோடி. பெண்களின் எண்ணிக்கை 3.15 கோடி. தமிழ்நாட்டில் ஆண்களைவிட பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகம். மூன்றாம் பாலினத்தவரின் எண்ணிக்கை 8294. நூறு வயதை எட்டியவர்களின் எண்ணிக்கை 8,765. முதல் முறையாக வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை 9.18 லட்சம் பேர்.

தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணி என்ற பெயரில் தி.மு.க. 21 இடங்களிலும், காங்கிரஸ் 16 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை தலா இரண்டு இடங்களிலும், ம.தி.மு.க., கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலா ஒரு இடங்களிலும் இணைந்து போட்டியிட்டன.

தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற பெயரில் பாரதிய ஜனதா கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், இந்திய ஜனநாயகக் கட்சி, புதிய நீதி கட்சி, இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம், தமிழக மக்கள் முன்னேற்றக்கழகம், ஓ.பன்னீர்செல்வம் அணி ஆகியவை இணைந்து தேர்தலை சந்தித்தன.




அ.தி.மு.க. கூட்டணியில் அ.தி.மு.க., புதிய தமிழகம், எஸ்.டி.பி.ஐ., தே.மு.தி.க. ஆகியவை இணைந்து தேர்தலைச் சந்தித்தன. இவை தவிர, நாம் தமிழர் கட்சி 40 தொகுதிகளிலும்

வேட்பாளர்களை நிறுத்தியது.

தமிழ்நாட்டில் ஏப்ரல் 19 ஆம் தேதி, நாடாளுமன்ற தேர்தல் ஒரே கட்டமாக நடைபெற்ற இந்தத் தேர்தலில் பாஜக தலைமையிலான கூட்டணியில் பாஜக 19 இடங்களிலும், பாமக 10 தொகுதிகளிலும், தமாகா 3 இடங்களிலும், அமமுக 2 இடங்களிலும், ஓபிஎஸ்சின் அதிமுகதொண்டர்உரிமைமீட்புக்குழுஒருதொகுதியிலும், ஜான் பாண்டியனின் தமமுக, தேவநாதனின் இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம், பாரிவேந்தரின் இந்திய ஜனநாயக கட்சி, ஏசி சண்முகத்தின் புதிய நீதிக் கட்சி ஆகியவை தலா ஒரு இடங்களிலும் தாமரை சின்னத்தில் களம் கண்டன.

கடந்த 2019 பொதுத் தேர்தலில் 353 இடங்களில் வெற்றி வாகை சூடிய பாரதிய ஜனதா கட்சியின் தலைமையிலான என்டிஏ கூட்டணி இம்முறை 400 இடங்களுக்கும் மேல் வெல்வதே இலக்கு என்ற நோக்கில் தேர்தலை சந்தித்தது.

கடந்த 2019 பொதுத் தேர்தலில் 93 இடங்களில் மட்டுமே வென்ற காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ கூட்டணி மேலும் சில அரசியல் கூட்டாக இணைத்து இந்த முறை இந்தியா கூட்டணி என்ற பெயரில் தேர்தல் களம் கண்டது.

ஏழு கட்டங்களாக நடைபெற்ற தேர்தல் முடிவுற்ற உடனே தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் பெரும்பான்மையாகஎன்டிஏகூட்டணி350இடங்களுக்கும் மேலாக வெற்றி பெற்று பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்றே பொதுவாக கூறி வந்தன.

இந்நிலையில் வாக்கு எண்ணிக்கைக்கும் முன்னர் தனது கூட்டணி கூட்டத்தைக் கூட்டிய இந்தியா கூட்டணி யினர் தாங்கள் வெல்வது உறுதியெனவும் 298 இடங்களில் தங்கள் வெற்றி உறுதி செய்யப்பட்டது எனவும் தங்களது ஆட்சிதான் அடுத்து அமையும் எனவும் அறிக்கை விடுத்தனர். ஜூன் 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கையும் நடைபெற்றது. கருத்துக்கணிப்புகளை பிரதிபலிப்பது போல் வாக்கு எண்ணிக்கையின் துவக்கத்தில் என் டி ஏ கூட்டணி 300 இடங்களுக்கும் மேல் முன்னிலை வகித்தாலும் நான்கு, ஐந்து சுற்று எண்ணிக்கைக்கு பிறகு நிலைமை மாறியது. இந்தியா கூட்டணியின் முன்னிலை கணக்குகள் கூடிக் கொண்டே வந்தன. பாரதிய ஜனதா கட்சி தனிப் பெரும்பான்மையை நோக்கி பயணிப்பது போல் தோன்றினாலும் அதன் எண்ணத்தில் மலையளவு இடியை இறக்கியது வாக்கு எண்ணிக்கையின் முடிவு.

இறுதியில், என்டிஏ கூட்டணியின் தலைவரான பாரதிய ஜனதா கட்சிக்கு 240 இடங்களுடன் என் டி ஏ கூட்டணி 291, இடங்களிலும், இந்தியா கூட்டணியின் தலைவரான காங்கிரஸ் கட்சிக்கு 99 இடங்களுடன் இந்தியா கூட்டணி 234 இடங்களிலும், சுயேச்சைகள் 17 இடங்களிலும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டன.

மொத்தமாக 240 தொகுதிகளில் வென்று தனிப்பெரும் கட்சியாக திகழும் பாரதிய ஜனதா கட்சியின் அறிவிப்பின்படி பிரதமர் நரேந்திர மோடி தனது மூன்றாவது ஐந்தாண்டு பதவிக்காலத்தை துவக்கும் வரலாற்று சிறப்பை பெற்றுள்ளார். அவருக்கு நமது அரசியல் சூரியன் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் தேர்தலில் இந்தியா முழுவதும் முடிவுகள் ஒருவாறு இருக்க தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் வழக்கம் போல தீர்க்கமான தெளிவான முடிவாகவே அமைந்துள்ளதாக தெரிகிறது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இந்தியா கூட்டணியில் போட்டியிட்ட கட்சிகள் அனைத்தும் 100% வெற்றியுடன் 40க்கு 40 இடங்களில் வெற்றிக்கனியை பறித்தன.

தமிழகத்தை ஐந்து முறை ஆட்சி செய்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் 12 இடங்களில் மூன்றாம் இடத்தையும் சில இடங்களில் டெபாசிட்டையும் இழந்த பரிதாபத்துக்கு ஆளானது.

மாவட்ட அளவிலான சிறு சிறு கட்சிகளை கூட்டணி சேர்த்துக்கொண்டு தேர்தலை சந்தித்த பாரதிய ஜனதா கட்சியின் தலைமையிலான தமிழக கூட்டணி தான் போட்டியிட்ட இடங்களில் 12 இடங்களில் இரண்டாம் இடத்தையும், 26 இடங்களில் மூன்றாம் இடத்தையும் பிடித்து தமிழகத்தில் தனது வாக்கு சதவிகித வளர்ச்சியை எடுத்துக் காட்டியுள்ளது.

இவை ஒருபுறம் இருக்க நாம் தமிழர் கட்சியின் நிறுவனர் சீமான் அவர்கள் பெற்றுள்ள வாக்கு சதவீதத்தையும் நாம் புறம் தள்ள முடியாது கடந்த சில தேர்தல்களாக அவர் தனது சீரான வாக்கு சதவீதத்தை உயர்த்தி வருவது தமிழகத்தில் உள்ள முன்னணி அரசியல் கட்சிகளுக்கு ஒரு கலக்கத்தை கொடுக்கும் என்பதில் மிகையில்லை.

எது எப்படியோ, தேர்தலுக்கு முன்னர் தேர்தல் கமிஷனையும், தேர்தல் மிஷினையும், பலவாறு விமர்சித்த அனைவருக்கும் நமது செயல்பாட்டினால் பதிலளிக்கும் விதமாக உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் மிகப்பெரிய தேர்தலை சிறப்புடனும், விமர்சனத்துக்கு உட்படாமலும் நடத்தி முடித்த தேர்தல் கமிஷன் தான் இந்த தேர்தலில் நாயகனாக நாம் பார்க்கிறோம்.

# 100% வெற்றியுடன் "சூப்பர் ஹீரோ ஸ்டாலின்" தமிழகத்தில் திமுக கூட்டணி 40/40

இந்திய திருநாடே மிகுந்த எதிர்பார்ப்புடன் சந்தித்த 18 வது பாராளுமன்றத் தேர்தல்களில் முதல் முஸ்தீபுகளை ஆரம்பித்தது இந்தியா கூட்டணி அதில் பெரும் பங்கு வகித்தவர் தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது தந்தையை போலவே தன்னுடைய ஆட்சிக் காலத்திலும் மிகக் குறுகிய காலத்தில் வட இந்திய தலைவர்களுடைய மனதில் இடம் பிடித்த ஒரு அரசியல் தலைவராக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட தேர்தல் இது.

ஏனைய வட இந்திய அரசியல் தலைவர்கள் உடன்படுகிறார்களோ இல்லையோ இந்தியாவின் அடுத்த பிரதம வேட்பாளராக கூட்டணியில் ராகுல் காந்தி தான் வேட்பாளர் என்று தனக்கு தோன்றியதை சென்ற 2019 தேர்தலில் முதல் ஆளாக வெளிப்படையாக கூறியவர் ஸ்டாலின்.

இந்த 2024 பாராளுமன்ற தேர்தலில் கூட்டணி கட்சிகளை அவர் இணைத்துக் கொண்டதும் எதிர்க்கட்சிகளை எதிர்கொண்டதும் எந்தவித பெரிய ஆர்ப்பாட்டமும் இல்லாமல் 40 தொகுதிகளையும் தன் வசப்படுத்தியதும் தனது தந்தையுடன் அரசியல் ரீதியாக பயணித்த நீண்ட நெடிய அனுபவத்தின் முதிர்ச்சியை எடுத்துக்காட்டுவது போல் அமைந்து விட்டது.

இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் பெற்றுள்ள 100% திமுகவின் வெற்றி எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் 2026 சட்டமன்ற தேர்தல் ஆகியவற்றுக்கு புத்துணர்ச்சியையும் உத்வேகத்தையும் அக்கட்சிக்கு அளிக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

திமுக தலைவராக மு.க.ஸ்டாலின் வந்த பிறகு அக் கட்சிக்கு ஒரு தோல்வி கூட கிடைக்கவில்லை. தொடர்ச்சியாக 8 பெரிய வெற்றிகளை அக்கட்சி பெற்றுள்ளது. அதில் இரண்டு லோக்சபா தேர்தல்கள், ஒரு சட்டசபைத் தேர்தல் வெற்றி என்பது மிகப் பெரிய வரலாறு. திமுக வரலாற்றில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு வரலாற்றிலேயே வேறு எந்தக் கட்சியும் இப்படி தொடர்ச்சியான வெற்றிகளை ஈட்டியது கிடையாது.




எம்ஜிஆர், ஜெயலலிதா, கருணாநிதி போன்ற பெரிய தலைவர்களே சாதிக்காத வெற்றியை ஸ்டாலின் தலைமை யிலான திமுக சாதித்துள்ளது.

மொத்த வட இந்தியாவும் தமிழ்நாட்டை மீண்டும் ஆச்சரியத்துடனும், அதிசயமாகவும் பார்க்கும் நிலையை ஏற்படுத்தியுள்ள தமிழக மக்கள், எல்லாப் பக்கமும் வேறு மாதிரி தீர்ப்புகள் வந்தாலும், தமிழகத்தில் மட்டும் எப்படி இப்படி என்று வட மாநிலத்தினர் ஆச்சரியத்துடன் கேள்வி கேட்கும் அளவுக்குத்தான் எப்போதுமே தீர்ப்பளித்து வந்துள்ளார்கள். இந்த முறையும் அப்படியே!

இந்த பொதுத் தேர்தலில் விருதுநகர், தர்மபுரி, நாமக்கல், கள்ளக்குறிச்சி தவிர வேறு எந்த தொகுதியிலும் எதிர்க்கட்சிகளால் கடும் போட்டியை கூட உருவாக்க இயலவில்லை. அதிமுக மற்றும் பாஜக தலைமையிலான இரண்டு கூட்டணிகளும் இந்த தேர்தல் தங்களுக்கே சாதகமாக அமையும் என பல கனவுகளுடன் சந்தித்த இந்த தேர்தலில் அவர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை கொடுத்து கலைஞரின் பிறந்தநாள் பரிசாக அனைத்து தொகுதிகளிலும் வெற்றிக்கனியை பறித்து ஸ்டாலினிடம் கொடுத்துள்ளனர் இந்தியா கூட்டணியின் தமிழக வேட்பாளர்கள். தமிழக தேர்தல் வரலாற்றில் இதுவும் ஒரு சாதனையாக எழுதப்படும்.

# பாராளுமன்ற தேர்தல் - தலைவர்கள் கருத்து

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பு பற்றி பல அரசியல் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். அதில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் "மோடியின் எதிர்ப்பு அலை இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருக்கிறது. அதே போல், இன்று தமிழகத்தில் முழு அளவுக்கு எதிர்ப்பு அலை இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு,'என்று தேர்தல் முடிவுகள் குறித்து கூறினார்.

தேர்தல் முடிவுகள் மோடிக்கு எதிரானது என்பது தெளிவாக தெரிகிறது. இது மோடியின் அரசியல் தோல்வி. இந்த தேர்தலில் பாஜக ஒற்றை முகத்தை காண்பித்து வெற்றிபெற நினைத்தது. அது மோடியின் முகம். தற்போது பாஜக பெரும்பான்மையை பெறத் தவறியது என்பதால், இது மோடியின் தோல்வி." என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார். மேலும் அவர் பேசுகையில், பாஜக தங்களை எதிர்த்தவர்களை சிறைக்கு பின்னால் தள்ளியது. எங்கள் போராட்டம் இன்னும் முடியவில்லை. போராட்டம் அதன் இலக்கை இன்னும் எட்டவில்லை. வரும் நாட்களில் நாட்டு மக்களின் நல னுக்காவும், அரசியலமைப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும் எங்களின் போராட்டம் தொடரும்." என்று தெரிவித்தார்.

தேர்தல் முடிவுக்கு பின் இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு ராகுல் காந்தி அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார். "இந்தியா கூட்டணியின் குரல் மக்களின் குரல் என்பதை தேர்தல் முடிவு தெளிவாக்கியுள்ளது ராகுல் காந்தி இந்தியா கூட்டணி ஒருங்கிணைந்து பாஜகவின் மக்கள் விரோத போக்கை எதிர்ப்போம்"

தமிழகத்தில் இந்தியா கூட்டணியின் 100% வெற்றிக்கு பிறகு விடுதலை சிறுத்தைகளின் கட்சித் தலைவர் திருமாவளவன் அவர்கள்,

பெரும்பான்மை இந்துக்கள் பாஜகவைப் புறக்கணித்துள்ளதாகவும், அரசமைப்புச் சட்டமும் சனநாயகமும் தற்காலிகமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும், சிறுத்தைகளுக்கான அரசியல் அங்கீகாரம் ஆறுதல் அளிக்கும் அருமருந்தாக தேர்தல் முடிவு அமைந்துள்ளதாகவும், இந்தியா கூட்டணிக்கு பெருவெற்றி வழங்கிய மக்களுக்கு மனமார்ந்தநன்றிகளையும்தெரிவித்துதனது அறிக்கையில் கூறியுள்ளார்.

தெலுங்கு தேசம் கட்சியின் தலைவரும் என்.டி.ஏ. கூட்டணியின் முக்கியஸ்தரும் ஆகிய சந்திரபாபு நாயுடு அவர்கள், தில்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் மக்களவை உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்தியாவின் பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பெற்ற மோடி அவர்களுக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும், மோடியின் தலைமையிலான ஆட்சியில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக உருவெடுப்பது உள்ளிட்ட சாதனைகளை படைக்கும் என்று உறுதியாக தான்நம்புவதாகவும்எக்ஸ்வலைதளத்தில்பதிவிட்டுள்ளார்.

இந்தியாவில் பண்டித நேருவுக்கு பிறகு மூன்றாவது முறை தொடர்ந்து பிரதமர் ஏறவிருக்கும் நரேந்திர மோடி அவர்கள் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளைப் பற்றி பேசும்பொழுது பொதுமக்கள் வெகுவான ஆதரவை தமக்கு தந்துள்ளதாகவும் காங்கிரஸ் கட்சியினை மீண்டும் மக்கள் புறக்கணித்துள்ளதாகவும் பிரதமர் வேட்பாளராக தான் சந்தித்த மூன்று முறைகளையும் சேர்த்து காங்கிரஸ் பெற்றுள்ள தொகுதியை விட கூடுதலான தொகுதிகளை மக்கள் பாரதிய ஜனதா கட்சிக்கு தந்துள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் பாஜகவின் வாக்கு வளர்ச்சி சதவீதத்தை குறிப்பிட்டு பேசிய அவர்,வருங்காலங்களில்தமிழ்நாட்டில்பாஜகவுக்கு சிறப்பான எதிர்காலம் இருப்பது கண்கூடாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் இருந்து எம்.பி.க்கள் கிடைக்காத போதும், வாக்கு விகிதம் அதிகரித்திருக்கிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணி சரியான பாதையில்தான் சென்று கொணடிருக்கிறது என்பதற்கு தமிழகத்தில் பாஜகவுக்கு வாக்கு வங்கி அதிகரித்திருப்பதே உதாரணம் என்று தெரிவித்துளள்ர்.

மேலும் அவர் பேசுகையில், தமிழ்நாட்டில் பாஜக கூட்டணிக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி என்றும், கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்களிலும் பாஜகவின் வாக்கு விகிதம் அதிகரித்திருக்கிறது என்றும் மோடி கூறினார்.

சமஜ்வாடி தலைவரான நிதிஷ் குமார் பேசும்பொழுது, மோடி அவர்கள் என்ன திட்டம் வேண்டுமானாலும் செயல்படுத்தி கொள்ளட்டும் கடைசிவரை அவருக்கு துணையாக நாங்கள் இருப்போம் என்று கூறியதோடு ஒரு படி மேலே சென்று எதிர்க்கட்சிகள் அடுத்த தேர்தலில் கூட அவர்களின் பெரும்பான்மைக்கு தேவையான தொகுதிகளை பெற முடியாது என்று விமர்சித்துள்ளார்.

# மதுரை எய்ம்ஸ் கட்டுமானம்: சுற்றுச்சூழல் அனுமதியை வழங்கிய தமிழக அரசு: கட்டுமானம் எப்போது முடியும்?

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமான பணிகளுக்குத் தமிழ்நாடு அரசு இப்போது சுற்றுச்சூழல் அனுமதியை வழங்கியுள்ளது. இது குறித்து விரிவாகப் பார்க்கலாம்.

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கக் கடந்த 2015இல் மத்திய அரசு அனுமதி வழங்கப்பட்டது. இதையடுத்து மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட முடிவு செய்யப்பட்டு இடமும் தேர்வு செய்யப்பட்டது.

கடந்த 2019ஆம் ஆண்டில் லோக்சபா தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதில் பிரதமர் மோடி, அப்போதைய தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தோப்பூரில் சுமார் 224.24 ஏக்கரில் ரூ.1,264 கோடியில் மருத்துவமனை கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. பணிகள் விரைந்து தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கட்டுமான பணிகள் தொடங்கவில்லை. வெறும் சுற்றுச்சுவர் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டது..

அதன் பிறகு பணிகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டது. இது அடுத்து நடந்த தேர்தல்களிலும் பேசுபொருள் ஆனது.

இதற்கிடையே நீண்ட தாமதத்திற்குப் பிறகு 2023 ஆகஸ்ட் மா எய்ம்ஸ் கட்டுமானப் பணிக்கான டெண்டர் விடப்பட்டது. எல் அன்ட் டி நிறுவனம் இதற்கான டெண்டரை எடுத்தது. இருப்பினும், கட்டுமான பணிகளுக்குச் சுற்றுச்சூழல் அனுமதியைக் கிடைக்காததால் கட்டுமானம் உடனடியாக தொடங்கப்படவில்லை. இதற்கிடையே எய்ம்ஸ் கட்டுமானப் பணிக்குச் சுற்றுச்சூழல் அனுமதி கோரி கடந்த மே 2ஆம் தேதி தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறையிடம் எய்ம்ஸ் நிர்வாகம் விண்ணப்பித்தது.

அனுமதி: இந்த ஆய்வறிக்கையை ஆய்வு செய்த வல்லுநர் குழு சுற்றுச்சூழல் துறையிடம் அளித்த ஆய்வறிக்கையில் அடிப்படையில் அனுமதி தரலாம் என்று கடந்த மே 10ஆம் தேதி பரிந்துரை அளித்தது.

மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்த நிலையில், தற்போது சுற்றுச்சூழல் அனுமதியைத் தமிழக அரசு வழங்கி உள்ளது.

இருப்பினும், கட்டுமானத்திற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், நிபந்தனைகளை மீறினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது எய்ம்ஸ் மருத்துவமனை அமையும் பகுதியில் மண்ணை சமன்படுத்தும் பணிகள் நடந்து வருகிறது.

இப்போது சுற்றுச்சுழல் அனுமதி கிடைத்துவிட்ட நிலையில், விறுவிறுவென கட்டுமான பணிகள் தொடங்கும் எனத் தெரிகிறது. 33 மாதங்களில் இந்த கட்டுமானம் முடிக்கப்படும் என எய்ம்ஸ் தரப்பில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# தருமபுரியில் சட்டவிரோதமாக ‘கருக்கலைப்பு’ மையமாக செயல்படும் தனியார் மருத்துவமனை

ஆணுக்கு நிகராக ஒரு பெண்ணை உருவாக்கும் முதல் படிக்கல் அவளுடைய கல்வி கண்ணை திறக்கும் முயற்சி என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இராது.

ஆனால், பெற்றோரின் கனவை சுமந்து கல்வி பயிலச்செல்லும் மாணவியர்கள் பாலின ஈர்ப்புக்கு பலியாகி, கர்ப்பமாகி, பெற்றவர்களின் கனவை கலைத்த கொடுமைக்கு ஆளாகி, அதனால் ஏற்படும் விளைவுகளால் தன்னுடைய எதிர்காலத்தையே பாழாக்கிக் கொள்ளும் சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இதற்கு உதாரணமான ஒரு நிகழ்ச்சியாக தருமபுரி மாவட்டம் பொம்மிடி அருகே உள்ள ஒரு அரசுப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவி 13 வயதே ஆன சிறுமி ஈவு இரக்கமற்ற ஏதோ ஒரு பாவியிடம் தனது கற்பை தொலைத்து அதன் விளைவாக கர்ப்பமாகி வீட்டில் வந்து கலங்கி நின்றாள். ( மனைவியின் எதிர்காலம் கருதி பள்ளியின் பெயரும், மாணவியின் பெயரும் மறைக்கப்பட்டுள்ளது).

செய்வதறியாது திகைத்த அவளின் பெற்றோர், மாணவி(மகளு)க்கு நடந்த கொடுமைக்கு எதிர்க்குரல் எழுப்ப முடியாமல், மகளுக்கு ஏற்பட்ட இந்த கொடூரமான நிலைமை வெளியே தெரிந்தால் மகளின் எதிர்காலத்துக்கு அல்லது உயிருக்கே கூட ஆபத்தாய் முடியும் என்று ஒருவாறு மனதை தேற்றி யோசித்து சேலம் அரசு மருத்துவமனையில் மகளின் வயிற்றில் உருவான சிசுவை கலைக்க முயற்சி செய்துள்ளார்கள். மருத்துவமனையில் இவர்கள் செய்த கருக்கலைப்பு முயற்சி அரசு மற்றும் காவல்துறைக்கு தெரிந்து விடுமோ? இதனால் ஏதேனும் பிரச்சினையாகும் என்றும் சந்தேகத்தை இளம் சிறுமி தரப்பு என்று தெரிய வந்தவுடன் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் உள்ள பொம்மிடி பகுதியில் அமைந்திருக்கும் ஜி. ஆர். எஸ். மருத்துவமனையில் அங்கு தலைமை மருத்துவராக உள்ள மருத்துவர் ரவிச்சந்திரன் என்பவரின் மனைவி மருத்துவர் சாந்தி என்பவரிடம் இரவோடு இரவாக கருக்கலைப்பு செய்து கொண்டு வீட்டிற்கு சென்று விட்டனர்.

இது குறித்து தருமபுரி மாவட்டத்தில் உள்ள குழந்தைகள் நல அலுவலர் மற்றும் அரூர் மகளிர் காவல் நிலைய அதிகாரிகள் வழக்கு பதிவு செய்து வெறும் வெள்ளை காகிதத்தை கறுப்பாக்கி சென்று விட்டதோடு இந்த பிரச்சனை அதிகாரிகள் அளவில் முடித்து வைக்கப்பட்டது.

இது தொடர்பாக அரூர் மகளிர் காவல் நிலையத்துக்கு தொடர்பு கொண்டு பேசியபோது நம்மிடம் பேசிய விசாரணை அதிகாரி இதுகுறித்து வழக்கு பதிவு செய்து விசாரணைநடந்துகொண்டிருப்பதாகவும்சம்பந்தப்பட்டவர் சிறுமியாதலால் பார்த்து நடந்து கொள்ளுங்கள் என்று நம்மை எச்சரிக்கும் விதமாக கூறினார்.

மாவட்ட குழந்தைகள் நல அலுவலரிடம் இது பற்றி விசாரிக்கும் பொழுது அவர் ஒரு படிமேலே சென்று இந்த சம்பவம் பற்றி எனக்கு அறவே தெரியவில்லை என்று கூறிவிட்டார்.

சட்டவிரோதம் என்று தெரிந்தே தவறுகள் செய்யும் இது போன்ற மருத்துவமனைகள் மாவட்டந்தோறும் இருக்கத்தான் செய்கிறது. இதுபோன்ற சட்டவிரோத செயல்களை தடுப்பதற்கு மருத்துவ குழுக்களும், காவல் நிலையங்களும், மாவட்ட நிர்வாகத்திற்கு உட்பட்ட இன்னும் சில குழுக்களும் செயல்பட்டு கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால், இங்கு உண்மையும், நீதியும் ஊமையாகி செய்வதறியாது திகைத்து கொண்டுள்ளதே தவிர அடைக்கப்பட்ட நீதியின் வாசலை திறப்போர் யாருமில்லை.

இந்தசமூகத்திற்கும்அரசுக்கும்மாவட்டநிர்வாகத்திற்கும் எஞ்சியுள்ள எமது கேள்விகள் இதுதான்.

அந்த மாணவியை கர்ப்பமாக்கிய காமக்கொடூரனுக்கு அரசு வழங்கும் தண்டனை என்ன?

ஒரு சிறுமி தான் தவறே செய்திருந்தாலும் அதன் விளைவாக கர்ப்பமானாலும் நான்கு பேருக்கு தெரியாமல் அதை கலைத்துவிட்டு ஒன்றும் அறியாதவர்கள் போல நடித்தல் நியாயமாகுமா?

இதில் சம்பந்தப்பட்ட காம கொடூரன் இந்த சிறுமி கதை முடிந்து விட்டது. நாம் அடுத்த நிகழ்வை நோக்கி நகரலாம் என வேறு சிறுமிகளுக்கும் இதே போன்றதொரு கொடுமையை நிகழ்த்த மாட்டான் என்பது என்ன நிச்சயம்?

ஒரு மருத்துவர் சிறுமியாக இருந்தாலும் யாராக இருந்தாலும் கேள்வி கேட்காமல் கருக்கலைப்பு செய்து விடலாம் என அரசும் சட்டமும் சொல்கிறதா?

ஊரில் நாம் விசாரித்த வகையில் கருக்கலைப்புக்கு பெயர் போன அந்த மருத்துவர் மீது மருத்துவத்துறையோ அரசோ காவல்துறையோ எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் விட்டதன் மர்மம் என்ன?

# ஓரியைத் தேடி ஓர் பயணம்....

பெருநற்கிள்ளி. சோழ மன்னனான இவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த நெடுங்கிள்ளியின்மகன்எனவரலாறால்அறியப்படுகிறான். தனது எல்லையை விரிவுபடுத்த ராஜசூயம் என்னும் கேள்வியை நடத்திய சோழ மன்னன் என்னும் சிறப்பு இவனுக்கு உண்டு. இதனால் இவன் "ராஜசூயம் கேட்ட பெருநற்கிள்ளி" என அழைக்கப்பட்டான்.

(இவனுடைய ஆட்சிக் காலத்துக்குப் பிறகு தித்தன் மகன் பெருநற்கிள்ளி என்னும் மன்னனும் சோழ தேசத்தை அரசாண்டிருக்கிறான். இவன் பேரவை கோப்பெருநற்கிள்ளி என்னும் அடைமொழியுடனும், இவனுடைய ஆட்சி காலத்திற்குப் பின் மேலும் இரண்டு பெருநற்கிள்ளிகள் இருந்தார்கள். அவர்களும் அடைமொழிகளால் அடையாளம் காணப்பட்டார்கள். அவ்விருவர் பெயர் முடித்தலைகோப்பெருநற்கிள்ளி என்றும், வேல்பல் தடக்கை பெருநற்கிள்ளி என்றும் வரும்)

தமிழர் தொழும் தனிமுதற் கடவுள், குறவள்ளியின் கொழுநன், தமிழ்த்தெய்வம், நினைத்தது முடிக்கும் ஆற்றலுடையவன், அழகும் இளமையும் அமையப் பெற்ற முருகனையொத்த பண்புடையவன் பெருநற்கிள்ளி என்று பெருமையாகப் பேசுகிறார் பாண்டரங்கண்ணனார் என்ற புலவர்.

இவன் மிகவும் இளைய வயதில் அரசு பொறுப்பேற்றதாக வரலாறு. இவனது படையின் சிறப்பு வருமாறு.

போருக்குப் பொருத்தமான, அலங்கரிக்கப்பட்ட குதிரைகள். மேகக் கூட்டத்தைப் போன்ற பரிசைகள். போர்முனை கலங்க மேற்சென்று வீரத்துடன் போர்செய்து, நெல்விளையும் பகைவர் கழனிகளைக் கொள்ளையூட்டி, காவல் மரத்தை விறகாக வெட்டி, குடி தண்ணீருக்காகக் காக்கப்படும் பொய்கைகளின் நீரிலே களிறுகளை விட்டுக் கலக்கிப் பகைவர் ஊரில் தீ வைத்து, அதன் ஒளி மாலைவேளையில் சூரியன் மறைந்தபின் தோன்றும் செந்நிறம்போலத் தோன்றும்படி செய்து, ஆரவாரிக்கும் வீரர்கள். அது நிலத்தில் இடமில்லை என்று சொல்லும்படியாகப் பரந்து செல்லும், இப்படிப் பெரும் படைச் சிறப்புள்ளவனாக இருந்தான் இவன்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பெருநற்கிள்ளிக்கும், சேர மன்னன் மாந்தரஞ் சேரல் இரும்பொறைக்குமிடையே போர் உண்டானதால் தன்னுடைய உதவிக்கு சென்ற



அத்தியாயத்தில் நாம் பார்த்த மலையமானின் உதவியை நற்கிள்ளி நாடுகிறான். பெருநற்கிள்ளிக்கு மலையமான் தாய் வழி உறவினன் என்பது மற்றுமொரு செய்தி.

கார்மேகவண்ணக் குதிரையையுடைய மலைநாட்டு மாமன்னன் காரியும் சோழனுக்கு செவிகொடுத்து உதவ, சமரசமில்லா அமர் செய்து பெருவெற்றியடைந்த நற்கிள்ளி பொல்லாதார் மடல் சாய்த்த நல்லாளனாக திகழ்ந்தான்.

பாணர்கள் எனப்படும் புலவர்கள் இந்த பெருவெற்றியைப் பற்றி பாடுகையில் மலையமான் அன்றி சோழ மன்னனுக்கு இம்மாபெரும் வெற்றியை பரிசளிக்க இவ்வுலகில் வேறெவரும் உளரோ எனப் பொருள்படும்படியாக வாழ்த்துக் கவிமாலை சொரிந்தனர்.

மாபெரும் வேளிர் மன்னனாக விளங்கிய மலையமான் திருமுடிக்காரியின் புகழ் இவ்வாறாக தான் சேர மன்னனுக்கு சேர்ந்தது. இங்கு வேளிர் என்பவர்கள் சங்க காலத்து சிற்றரசர்களை குறிக்கும். இவர்கள் ஏதாவது ஒரு பேரரசர்களின் கீழோ அல்லது தனித்தோ ஆட்சியில் இருந்தவர்கள். இந்த வேளிர்களில் பலர் பேரரசர்களைப் போல செல்வாக்கு மிகுந்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பது வரலாறு.

பெருநற்கிள்ளியிடம் பெற்ற தோல்விக்கு பிறகு சேரன் செங்குட்டுவனுடைய சமகாலத்து சேரப் பேரரசன் பெருஞ் சேரல்இரும்பொறை, வேளிர் நட்பை வேகப்படுத்த முயற்சி

செய்தான். கருவூரில் இருந்து ஆட்சி செலுத்திய இவன் தனது தேசத்தின் மேற்கு மற்றும் தெற்கில் உள்ள வேளிர்களை துணையாக்கிக் கொண்டான். பின் சோழர்களிடமிருந்து நைச்சியமாக மலையமானை பிரித்த இரும்பொறை, அவனையும் தனது உயரிய நட்பாக்கி கொண்டான். கொங்கு தேசத்தின் பாற்பட்ட கொல்லி, கொல்லி முற்றம், தகடூர், கோமூர், பூழி போன்ற பிறநாட்டு வேளிர் மன்னர்களை சாய்த்து தன் பக்கம் சேர்க்க தீவிர முயற்சி கொண்டான்.

இவன் தொடக்க காலத்தில் ஆண்டு கொண்டிருந்த கருவூர் நாட்டுக்கு அண்மையில் பூழிநாடு என்றொரு நாடு இருந்தது. அந்நாட்டைக் காக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதனால் 'பூழியர் மெய்ம்மறை' என்று இவன் கூறப்படுகிறான். பூழி நாட்டு மக்களுக்குக் கவசம் போன்று விளங்கினான் என்று கூறுவதும் உண்டு.

கழுவுள் என்பவன் காமூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு கொண்டிருந்தான். இந்தக் காமூர் தோட்டிமலை என்னும் மலைநாட்டில் இருந்தது. ஆழமான அகழி, குறுகிய வாயில்களைக்கொண்ட மதில் ஆகியவற்றைக் கொண்ட அரண்களையுடையது அந்த ஊர். அவ்வூர் மக்கள்பசுவளர்த்தஇடையர்கள்.அரசனதுபோர்வீரர்களாக வாழ்ந்த அவ்வூர் இடையர்கள் பிற நாடுகளுக்குச் சென்று வெட்சிப்போர் செய்து ஆநிரைகளைக் கவர்ந்துவந்த ஆற்றல்மிக்க வீரர்களாகத் திகழ்ந்தனர்.

பெருஞ்சேரல் இரும்பொறை தன்னுடன் சேர்ந்திருந்த 14 வேளீர் தலைவர்களை கொண்ட ஒரு பெரும்படையுடன் கழுவுள் மன்னனது கோட்டையைத் தாக்கினான். வென்று காமூரைத் தீக்கிரையாக்கினான். அதில் எழுந்த தீப்புகை, திசைகளையும் மதில்களையும் மறைக்கும் அளவுக்கு மிகுந்து உயர்ந்தது. இந்தப் போர் காலையில் தொடங்கி மாலையில் முடிவுற்றது. தன் தோல்வியை எண்ணிய கழுவுள், மறுநாள் விடியுமுன்பே காமூரைவிட்டு ஓடிவிட்டான். தலைவனை இழந்த காமூர் மக்கள் கலங்கினர்; மேலும் போர் செய்யாமலிருக்கும்படி பெருஞ் சேரலை வேண்டிக் கொண்டனர். கைம்மாறாகப் போர் யானைகளையும் அணிகலன்களையும் தந்தனர். அவர்கள் தந்த திறைப்பொருளைப்

பெற்றுக்கொண்டு பெருஞ்சேரல் மேலும் அவர்களைப் போரிட்டுக் கொல்லாது விட்டுவிட்டு மீண்டான். லஞ்சம் வாங்கிக்கொண்டு உயிரைக் கொல்லாது விட்டுவிட்டுச் செல்லும் எமன்போல அவன் மீண்டான் என்று கூறப்படுகிறது.

இந்த காமூர்ப்போர் சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறையின் தோல் வலியையும் படை வலியையும் உலகுக்கு பறைசாற்றுவதாகவே அமைந்தது. அடுத்ததாக கொல்லிமலை நாட்டிற்கு மேற்கே அமைந்துள்ள கொல்லி முற்றத்தையும் விரைவாகவே கைப்பற்றி விட்டான் சேர வேந்தன்.

ஏற்கனவே துணைக்கு 14 வேளீர் மன்னர்கள் அல்லது குழுக்கள் தற்பொழுது மீண்டும் இரண்டு நாட்டை வென்றதன் மூலம் கிடைத்த போர்ப்படைகள். இவைகளை வைத்து கொங்கு நாட்டின் எஞ்சிய பகுதிகளான கொல்லியையும், தகடூர் எஞ்சி இருந்த சில வேளிர் நாடுகளை தன் வயப்படுத்த முடியுமா என சிந்தித்த சேரன் இதை செயலாக்க எப்படி வியூகம் வகிப்பது என்பதை பற்றி சிந்திக்கலானான்.

இதே காலகட்டத்தில் தகடூர் நாட்டை ஆண்டு கொண்டிருந்த அதியன் தன்னைச் சுற்றி இருந்த பெரும்பாலான வேளிர் மன்னர்களை தன்வயப்படுத்தி கொங்கு பிரதேசத்தில் தனது ஆதிக்கத்தை செலுத்தலானான். தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த மாமன்னர்கள்மூவருக்கும்நிகரான,சுயமான ஆதிக்கத்தை செலுத்தி உரிமையை நிலைநாட்டும் முயற்சியை முன்னெடுத்த அதியனின் இந்த வளர்ச்சி சேர மன்னன் இரும்பொறைக்கு பொறாமைத்தீயை மூட்டியது.

இந்த சமயத்தில் தான் வீரத்திலும் ஆற்றலிலும் அதியனுக்கு சமமாக திகழ்ந்த முள்ளூர் நாட்டு வேளிர் மன்னன் மலையமான் திருமுடிக்காரி சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறையிடம் இணக்கமான நிலைப்பாட்டை எடுப்பதாக தகவல் அறிந்து, ஆத்திரப்பட்ட அதியமான் முள்ளூர் நாட்டு மன்னன் மலையமான் காரிமீது படையெடுத்துச் செல்கிறான். அதியமானின் தாக்குதலைசமாளிக்கமுடியாதமலையமான்திருமுடிக்காரி புறமுதுகிட்டு ஓடி பெருஞ்சேரல் இரும்பொறையிடம் தஞ்சம் புகுகிறான்.

ஒரு காலத்தில் தன்னுடன் போரிட்டு தோற்று ஓடிய பெருஞ்சேரல் இரும்பொறையின் தலைமையை ஏற்றுக் கொள்ள தயாராகும் சூழ்நிலைக்கு மலையமான் திருமுடிக்காரி தள்ளப்படுகிறான்.

கால்லிமலை நாட்டையும், அதியனின் தகடூர் நாட்டையும் எப்படியாவது கைப்பற்றிட வேண்டும் என்ற பேராசையில் சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை தன்னுடைய புது நண்பன் நண்பன் காரியிடம் மந்திராலோசனை நடத்துகிறான்.

வெகுவான யோசனைக்கு பிறகு மலையமான் கூறலானான். மாற்றானுக்கு அடிமையாய் இருப்பதில் மரணம் ஏற்படினும் உடன்பாடு இல்லை என்பதில் உறுதி கொண்டவன் தகடூர் நாட்டு அதியன்! அவனுடைய உறவினனும் உற்ற நண்பனுமாய்த் திகழும் ஓரியும் அவ்வாறான மனப்பாங்குடனே உள்ளவன்! இருவரும் ஓர் உறைக்குள் வைக்கப்பட்ட இரு கத்திகள். இவர்களை ஒன்றுபட்டுஎதிர்த்தாலும்பலனேதும்ஏற்படப்போவதில்லை.

ஓரி பெரும்படை உடையவன் அல்லன். அவனை அடக்கி அவன்நாடாகியகொல்லிக்கூற்றத்தைத்தன்வசப்படுத்திக் கொண்டால், அதியமானை அடுத்தபடி அடக்குவது எளிதாக இருக்கும்" எனத் திட்டமிட்ட பெருஞ் சேரலிரும்பொறை.

"தக்க சமயத்தில் கொல்லிக் கூற்றத்தின் மேல் படை யெடுக்கலாம் என்று இருக்கின்றேன்" என காரிக்குச் செய்தி அனுப்பினான்.

பதிலுக்கு "ஓரி மிகச் சிறியவன். படைபலம் இல்லாதவன். சிறிதளவே படை வைத்துள்ளான்" என்ற கருத்தை இரும்பொறைக்கு அனுப்பி விட்டான் காரி.

என்னுடன் உமது போர்ப்படையை அனுப்புவாயாகில் ஓரியை வீழ்த்தி கொல்லிமலை நாட்டை உமக்கு ஒப்படைக்கிறேன் என உந்தினான் மலைநாட்டு மலையன். இரும்பொறையும் உவகையுடன் ஒப்புக்கொள்ளவே மலையமான் திருமுடிக்காரி கொல்லிமலை நாட்டை முற்றுகையிட தயாரானான்.

முதலில் "கொல்லிக் கூற்றத்தைச் சேரமானுக்குக் கொடுத்தால் அவனுக்கு அடங்கிய வேளாக ஆட்சி புரியலாம். இல்லை யானால் போருக்கு வருக" எனத் தூது விட்டான் காரி ஓரிக்கு. ஓரி உடன்பட வில்லை. இரும்பொறையின் சார்பில் மலைநாட்டு மன்னன் காரி, கொல்லியின் தலைவன் ஓரியின் சேவூர் நகரை முற்றுகை யிடத் தயாரானான்.

ஒப்பற்ற வீரனும், முள்ளூர் நாட்டுக்கு அதிபதியுமான காரி நிகரற்ற குதிரை வீரன். அவன் குதிரைக்கும் காரி என்பது பெயர். அக் குதிரையின் திறமையால் பெரும் போர்களில் வெற்றி பெற்றான் காரி. முடிமன்னர் மூவரும் அவன் உதவியை நாடுவது இயல்பு. சேர மன்னனின் மென் சொல்லுக்கு இசைந்து தனது சேனை பரிவாரங்களுடன் மண் நடுங்க, மாற்றார் மனம் ஒடுங்க, அவன் குதிரையின் மேலேறி போர்க்களத்தை நோக்கி புறப்பட்டான். கடும்போர் நிகழ்ந்தது.

முன்பொரு சமயம் அதியமானிடம் தோற்றோடிய காரி அந்த அவமானத்தைப் போக்க வேண்டிய கட்டாயத்துடன் வீரமாக ஓரியிடம் சமர் செய்தான். காரியின் படைகள் கொல்லிக் கூற்றத்து ஓரியின் நகரில் புகுந்தன. நகரைத் தீயிட்டன. முற்றுகையிட்டன. .இதனைச் சிறிதும் எதிர்பார்த்திராத ஓரி வில்லாற்றலுடன் போரிட்டான். மலையொடு பொருத மால்யானையயானான். இழையணி யானை இரப்போர்க்கு ஈந்துவிட்டான்; சுடர்விடு பசும்பூண் பொன் அணி புலவர்களுக்கு அளித்து விட்டான். கொடைக்கு முக்கியத்துவம் கொடுத்த ஓரி படை பலம் பெருக்க மறந்துவிட்டதால் வந்த வினை. ஆதன் ஓரி காரியின் சூழ்ச்சி மடுவில் அழுந்தி விட்டான். பிட்டங் கொற்றன் என்ற பெருஞ்சேரலிரும்பொறையின் படைத் தலைவன்ஓரியின்ஓரிக்குதிரையைவேலால்வீழ்த்தினான். வல்வில் ஓரிக்கும் அடி சறுக்கியது! அருகில் இருந்த காரி ஓரியை வாளால் வெட்டி வீழ்த்தினான். பிட்டன் கொற்றனுடன் போர் செய்து கொண்டிருந்த ஓரி காரியின் இந்த சூழ்ச்சித் தாக்குதலை அறியவில்லை. ஓரியின் வில்லாற்றல் வீழ்ந்தது. காரியின் சூழ்ச்சிச் சொல்லாற்றல் விழித்தது.

கொல்லியை ஆண்ட வல்வில் ஓரியின் புகழ் சொல்லில் நிலைத்தது! போர்க்களத்தில் ஓரியைக் கொன்றான் காரி. கொல்லிமலையைக் கைப்பற்றி அதன் உரிமையை சேரமானிடம் ஒப்புவித்தான். அன்று முதல் சேரமானும், மலையமானும் மேலும் உற்ற நண்பராயினர். உரிமை வேட்கை வில்லாளருள் வல்லாளனாகிய ஓரியை முடித்த வீரன் என்று சேரன் காரியைப் புகழ்ந்து பாராட்டினான். கொல்லி நாட்டு வில்லாளன் வல்வில் ஓரி மறைந்தவுடன் அவனுடைய மனைவியும், ஒரே மகள் கொல்லிப்பாவையும் உடன்கட்டை ஏறி உயிர்விட்டார்கள் என கூறுவோர் உண்டு.

வஞ்சத்தால் வீழ்ந்த ஓரியின் இழப்புச் செய்தி தலையில் இடியென விழுந்ததை கேட்ட தகடூர் தலைவன் அதியமான் அதிர்ச்சியுற்றான். மெல்லக் கோபம் தலைக்கேற, சேரமான் மற்றும் மலையமானின் கூட்டுச்சதியில் நேர்ந்த வல்வில் ஓரியின் இழப்புக்கு பழி தீர்க்க தனது சேனைகளுடன் மீண்டும் மலைநாட்டு காரிமேல் படையெடுக்க தீர்மானித்தான்.

அப்போது, பெருஞ்சேரல் இரும்பொறையின் உயரிய பண்புகளைப் பலர் உணர, அவன் அவையிலிருந்து அவன் சிறப்பை உணர்த்தும் வகையில் பாடல்கள் பல பாடிப் பாராட்டி வாழ்ந்துவந்த புலவர் அரிசில்கிழார் அதியமானின் அவைக்கு வரலானார்.

# தர்மபுரி பாராளுமன்றம்! ஒரு பார்வை!!

பல தேர்தல்களில் வித்தியாசமான தீர்ப்புகளை பெற்ற பாராளுமன்றம்! பாட்டாளி மக்கள் கட்சியின் நம்பிக்கைக்குரிய பாராளுமன்றமாக பலமுறை தருமபுரி விளங்கி இருக்கிறது. ஆனாலும், கூட்டணி இல்லாமல் எப்பொழுதும் இந்த பாராளுமன்றத்தை பாட்டாளி மக்கள் கட்சி கைப்பற்றியதில்லை.

திராவிட கட்சிகளுடனான கூட்டணியில் மாறி மாறி இடம் பிடித்த பாட்டாளி மக்கள் கட்சி தர்மபுரி பாராளுமன்றத்தில் கூட்டணியோடு சேர்ந்து வென்றும் இருக்கிறது. தோற்றும் இருக்கிறது.

2014 இல் இதே பாஜக கூட்டணியுடன் தேர்தலை சந்தித்த பாமக இங்கு வெற்றியையும், 2019ல் அதிமுக கூட்டணியுடன் தேர்தலை சந்தித்த பாமக இங்கு தோல்வியையும் கண்டது.

ஆனாலும், பாட்டாளி மக்கள் கட்சிக்கு என்று ஒரு நிரந்தர வாக்கு வங்கி தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து இருந்து கொண்டிருப்பதால் அக்கட்சிக்கு இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தொகுதியாக பார்க்கப்படுகிறது. அந்த அடிப்படையில் பாஜக கூட்டணியில் தருமபுரி தொகுதியை கேட்டு பெற்றது மட்டுமல்லாமல் திருமதி அன்புமணி ராமதாஸ் அவர்களை வேட்பாளராக்கி அதை ஸ்டார் தொகுதியாகவும் மாற்றியது பாமக.

வாக்கு எண்ணிக்கை துவக்கத்திலிருந்து பாமகவின் கையே இப்பாராளுமன்றத்தில் ஓங்கி இருந்தது. அதிக வித்தியாசம் இல்லாமல் ஒரு சீரான வித்தியாசத்தில் 15 சுற்று வரைக்கும் பயணப்பட்ட பாமக 16 வது சுற்றுக்கு மேல் தடுமாற்றம் கண்டது.

பதினாறாவது சுற்றில் இருந்து திமுகவின் வாக்கு எண்ணிக்கை சிறிது சிறிதாக அதிகரித்தது. இறுதியில் 23 சுற்றுகள் கொண்ட தர்மபுரி பாராளுமன்ற வாக்கு எண்ணிக்கை முடிவில் 21,000 வாக்குகளுக்கும் அதிகமான வித்தியாசத்தில் திராவிட முன்னேற்ற கழகம் இந்தப் பாராளுமன்றத்தை மீண்டும் தனதாக்கிக் கொண்டது.

பாமகவின் இந்த தோல்விக்கு காரணமாக பல காரணிகளை குறிப்பிட்டாலும் அரூர் மற்றும் பாலக்கோடு சட்டமன்றங்களில் பெற்ற கூடுதல் வாக்குகளே திமுகவின் வெற்றிக்கு சாத்தியமானது. தர்மபுரி மாவட்டத்தில் பரவலாக திமுக நிர்வாகிகளிடையே முரண்பாடுகள் இருந்தன. அதிமுக நிர்வாகிகளிடையே முரண்பாடுகள் இருந்தன. பாமக மற்றும் பாஜக நிர்வாகிகளிடையயும் முரண்பாடுகள் இருந்தன.

ஆனால், அனைத்தையும் மீறி திமுக மற்றும் அதிமுக நிர்வாகிகளான முன்னாள் அமைச்சர் அன்பழகனுக்கும், முன்னாள் அமைச்சர் பழனியப்பனுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் விளைவு அரூர் சட்டமன்றத்திலும் பாலக்கோடு சட்டமன்றத்திலும் திமுக முன்னணி வாக்குகள் பெற்றதும் பாராளுமன்றத்தை திமுக மீண்டும் தக்க வைத்துக் கொண்டதற்கும் காரணம் என பேசிக்கொள்கிறார்கள். எப்படியோ இரு துருவங்களுக்குமிடையே உருவான வித்தியாசமான கெமிஸ்ட்ரி தர்மபுரி பாராளுமன்றத்தை மீண்டும் மிரள வைத்திருக்கிறது.



# ஜெயலலிதா குறித்து அண்ணாமலை கூறுவது அவருடைய அறியாமையைக் காட்டுகிறது: சசிகலா

சசிகலா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, புரட்சித்தலைவி அம்மா அவர்களை இந்துத்துவா தலைவர் என தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை குறிப்பிடுவது அவருடைய அறியாமை, புரட்சித்தலைவி அம்மா அவர்களைப் பற்றி தவறான புரிதலைதான் வெளிப்படுத்துகிறது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சாதி, மத, பேதங்களை கடந்து அனைத்து தரப்பினராலும் மதித்து போற்றக்கூடிய ஒரு மாபெரும் தலைவியாக தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டியவர்.





புரட்சித்தலைவி அம்மா அவர்கள் “மக்களால் நான் மக்களுக்காகவே நான்” என்று தன் வாழ்நாள் முழுவதும் தமிழக மக்களின் நலனுக்காகவே தனது வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு சிறந்த மக்கள் தலைவர். பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோரின் வழியில் ஒரு உண்மையான திராவிட தலைவராக தனது இறுதி மூச்சு வரை வாழ்ந்து காட்டியவர்.

இந்து, இஸ்லாமியர் கிறிஸ்துவர் என அனைத்து சமூகத்தினரும் சொந்தம் கொண்டாடிய ஒரே ஒப்பற்ற தலைவி புரட்சித்தலைவி அம்மாதான் என்பது நாடறிந்த உண்மை. சாதி, மத, பேதங்களை கடந்து ஏழை, எளிய சாமானிய மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட தன்னை அர்பணித்துக்கொண்ட மாபெரும் தலைவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

“அம்மா என்றால் அன்பு” என்ற தாய்மைக்கு இலக்கணமாக நம்மோடு வாழ்ந்து மறைந்தவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். புரட்சித்தலைவரை போன்று, புரட்சித்தலைவி அம்மா அவர்களும் தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களில் இன்றைக்கும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார். புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டு மக்களுக்கு கொடுத்த அத்துனை மக்கள்நலத் திட்டங்களும் இன்றைக்கும் பயனளித்து வருவதை யாராலும் மறுக்க முடியாது.

அதிலும் குறிப்பாக பெண்ணினத்தை பாதுகாத்திடவும், அவர்களது நலனுக்காகவும் கொண்டு வந்த திட்டங்கள் ஒவ்வொன்றும் வரலாற்றில் முத்திரை பதித்தவை என்பதை சொல்லிக்கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மா அவர்களின் விடா முயற்சியால் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக 69 சதவிகித இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்து, அதனை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து “சமூக நீதி காத்த வீராங்கனை” என்று போற்றப்பட்டவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சத்துணவு தந்த சரித்திர நாயகன் வழிவந்த புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உலகமே வியந்து பார்க்கும் வகையில் அம்மா உணவகம் தந்து எண்ணற்ற ஏழைகளின் பசியைப் போக்கிய அன்னலட்சுமியாக வாழ்ந்து காட்டினார். ஆறு முறை தமிழக முதல்வராக பொறுப்பேற்று தமிழக மக்களின் தேவைகளை அறிந்து அதை நிறைவேற்றும் வகையில் ஆட்சி செய்து “முதல்வர்” என்ற பதவிக்கு பெருமை சேர்த்த உன்னத தலைவராக விளங்கினார்.

“ஜெ ஜெயலலிதா என்னும் நான்” என்று இந்த தமிழ் மண்ணில் எப்போதெல்லாம் உச்சரிக்கப்பட்டதோ, அந்த காலகட்டங்களில் எல்லாம் தமிழ்நாடு தலை நிமிர்ந்தது. இன்னும் சொல்லப்போனால் தமிழர்கள் தங்களது உரிமைகளை பறிகொடுத்து விடாமல் வாழமுடிந்தது. மேலும் மகிழ்ச்சியோடும். பாதுகாப்போடும் தமிழக மக்களால் இருக்க முடிந்தது.

ஏழை எளியவர்களுக்கு அம்மாவாக அரசியல் எதிரிகளுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய ஆளுமை தான் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு தெய்வ நம்பிக்கை இருப்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் அதேசமயம் என்றைக்கும் மத நம்பிக்கை கிடையாது. அனைவரையும் சமமாக மதித்த ஒரே ஒப்பற்ற தலைவியாக தன் வாழ்நாள் முழுவதும் இருந்தவர்.

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி காலங்களில் அனைத்து தரப்பினரும் மிகுந்த பாதுகாப்போடு இந்த தமிழ் மண்ணில் வாழமுடிந்தது. தமிழகத்தை ஒரு அமைதி பூங்காவாக வைத்து இருந்த பெருமை புரட்சித்தலைவி அம்மா அவர்களையே சேரும். இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒரு மக்கள் தலைவரை எந்தவித குறுகிய வட்டத்திற்குள்ளும் யாராலும் அடைத்துவிட முடியாது என்பதை மட்டும் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடமையை தட்டிக் கழிக்கும் காவல்துறை!

இயல்பாகவே குற்றச் செயல்கள் மிகுதியாக காணப்படும் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் பகுதியில் காவல்துறையினரால் அலைக்கழிக்கப்பட்டு ஒரு குடும்பம் நிர்க்கதியாக நிற்கிறது என்றும் அவர்களுக்கு உதவி புரியும் வகையில் ஊடகத்தினராவது அவர்களுடைய நிலையை எடுத்துச் சொல்லி அதிகாரிகளுக்கு புரிய வைக்க வேண்டும் என பெங்களூர் மல்லேஸ்வரத்தை சேர்ந்த வழக்கறிஞர் உமா அவர்கள் நமக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

கிருஷ்ணகிரிமாவட்டம்ஒசூர்வட்டத்தில்சுகவனமூர்த்தி மடம் தெருவை சேர்ந்தவர்கள் காலம் சென்ற ரத்தினம் மற்றும் தனம்மாள் என்ற தம்பதியினர். இவர்களுக்கு ஒரு மகனும், நான்கு மகள்களும் இருந்தனர்.

மகனுக்கு திருமணமாகி மனைவியோடு இரண்டு பெண் குழந்தைகளுடன் அதே தெருவில் வசித்து வருகிறார். ஆனால், வயது முதிர்ந்த பெற்றோர்கள் படும் துயரங்களை கண்கூடாக பார்த்துக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யவோ அல்லது வயிறார ஒரு வேலை உணவு கொடுக்கவோ இவர்கள் எப்பொழுதும் தயாராக இருந்ததில்லை. தனம்மாள் என்பவர் தன்னுடைய இறுதி காலத்தில் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்த பொழுது கடனே என்று பார்க்க வந்த இவர்களிடம் ஒரு டீ கேட்டு இருக்கிறார். அவர் கேட்ட ஒரு டீயை அவர் இறக்கும் வரை இவர்கள் வாங்கி கொடுக்கவோ, வைத்துக் கொடுக்கவும் தயாராக இல்லை.

இச்சூழ்நிலையில் தனம்மாவுக்கு ஸ்ட்ரோக் வந்து கை, கால் செயலிழந்த நிலையில் அவருடைய உறவினர், வழக்கறிஞர் உமா என்பவர் பெங்களூரில் உள்ள மல்லேஸ்வரத்தில் இருக்கும் தனியார் மருத்துவமனையில் 5 லட்சம் ரூபாய்க்கும் மேல் செலவு செய்து தன்னுடைய வீட்டில் பாதுகாப்பாகவும் வசதியாகவும் வைத்திருந்த சூழ்நிலையில், இவருடைய மகன் ரவிசேகர், வழக்கறிஞர் உமா அவர்களின் வீட்டுக்கு சென்று இனிமேல் என் தாயை நல்லபடியாக பார்த்துக் கொள்கிறேன் இன்று வாக்குறுதி அளித்து ஒசூருக்கு கூட்டி வந்திருக்கிறார்.

பிறகு எப்படியோ இந்த தனம்மாவை கடந்த 2020இல் ஏமாற்றி அவருக்கு சொந்தமான சொத்துக்களை அவரின் மகன் ரவிசேகர், தனது மகள்கள் திவ்யா மற்றும் ரேகாவிற்கு எழுதி வாங்கி கொண்டு விட்டார்.

பிறகு தனம்மாவின் மகன் ரவிசேகர் தன்னுடைய மனைவி மற்றும் மகள்களுடன் சேர்ந்து தனம்மாவை வீட்டிற்கு வெளியே இழுத்து வந்து விட்டிருக்கிறார்கள். உன்னை பெங்களூரில் இருந்து ஒசூருக்கு கூட்டி வந்ததே உன்னுடையசொத்துக்களைஎழுதிவாங்குவதற்குத்தான். இனி நீ எங்களுக்கு தேவை இல்லை என கூறி எங்கேயாவது போய் பிச்சை எடுத்து பிழைத்துக் கொள் என துரத்தி விட்டிருக்கிறார்கள்.

இடையில் தனம்மா தனக்கு வேண்டிய சிலரின் உதவியால் மாவட்ட ஆட்சியரகத்திற்கு சென்று மனு கொடுத்ததன் விளைவாக மாதம் பத்தாயிரம் ரூபாய் ரவிசேகர் தனம்மாவிற்கு பராமரிப்பு செலவுக்காக கொடுத்த விட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டும் அவர் ஏதும் தன் தாயாருக்கு உதவி செய்ய தயாராக இல்லை.

பெற்ற பிள்ளையால் இப்படி நிர்க்கதியாகி தெருவுக்கு வந்து விட்டதை நினைத்து, புழுங்கி மன உளைச்சலுக்கு ஆளாகி அவர் சிறிது நாட்களில் அவர் தன் மகள்களுக்கு எதுவுமே செய்யாமல் போய்விட்ட நிலை வந்து விட்டதே எனஎண்ணிவேதனைப்பட்டுஇறந்துவிட்டார்.அவருடைய மகன் ரவிசேகர் தன்னுடைய தாயார் இறப்பிற்கு கூட செல்லவில்லை. அது மட்டுமல்ல தாய்க்கு ஒரே மகனான அவர் பெற்ற தாயின் பிணத்திற்கு கொள்ளி வைக்க கூட வரவில்லை. ஆனால் சொத்தை மட்டும் எழுதி வாங்கிக் கொண்ட அவர் அந்த சொத்தில் தற்பொழுது குடியிருக்கும் தனம்மா என்பவரின் இரண்டாவது மகளும் ரவி சேகர் என்பவரின் சகோதரி குடியிருப்பதை காலி செய்ய வற்புறுத்தி தன்னுடைய பழக்கவழக்கங்களின் மூலம் தொடர்புடைய ஒசூரை சேர்ந்த ரவுடியிச கேங்க்குகள், மற்றும் தனக்கு ஆதரவாக செயல்படும் போலீஸ் நபர்கள் சிலரை வைத்துக்கொண்டு தனது சகோதரியும், சகோதரியின் மகளையும் வலுக்கட்டாயமாக அந்த வீட்டை விட்டு வெளியேற்ற முயற்சி எடுத்து தன்னாலான அனைத்து நெருக்கடிகள் மற்றும் மன உளைச்சல்களை அவர்களுக்குதொடர்ந்துகொடுத்துக்கொண்டிருக்கிறார்.

தனம்மா என்பவருடைய தூரத்து உறவினரும் வழக்கறிஞருமான பெங்களூர் மல்லேஸ்வரத்தை சேர்ந்த உமா என்பவர் இவர்களுக்கு ஆதரவாக அடிக்கடி தனது இயலாத சூழ்நிலையிலும் (இவர் உடல் ஊனமுற்றவர் இவரால் இயல்பாக நடக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது) வந்து பார்த்து ஆறுதல் கூறிவிட்டு சட்ட உதவிகளை செய்ய முயற்சித்து வருவதாக குறிப்பிட்டார். இவர் ரவிசேகர் என்பவர் மீது தகுந்த விசாரணை எடுத்து சட்ட நடவடிக்கை துரிதப்படுத்த

பலமுறை ஒசூர் நகர காவல் நிலையத்திற்கு சென்றும் அங்கு அவருக்கு உரிய மரியாதை தரப்படவில்லை என்பதும், ஒசூர் நகர போலீசார் இயல்பாக தங்களுடைய பணியை செய்வதற்கு தயாராக இல்லை என்பதும் தமக்கு வேதனை அளிப்பதாக கூறுகிறார்.

நாமும் இது பற்றி அறிந்து கொள்வதற்காக தர்மபுரி நகர காவல் ஆய்வாளர் ரவிக்குமார் என்பவரிடம் தொடர்பு கொண்டோம். முதலில் சரியான நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்த அவர் அதன் பிறகு இது தொடர்பாக பேசுவதற்கு போன் செய்தால் அவர் அந்த போன் அழைப்பை சட்டையே செய்யவில்லை. காவல் துணை கண்காணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு பேசிய போதும் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார். அவ்வளவுதான் இதுவரை அந்த பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு காவல்துறையில் எந்த ஒரு உதவியும் செய்ததாக தெரியவில்லை.

பெற்றவர்களின் சொத்தில் உரிமை என்பது பெற்றோர்களின் பராமரிப்பு என்ற கடமையிலிருந்து விலகிச்சென்றுஇருந்தாலும்மகன்மற்றும்அவர்களுடைய வாரிசுகளுக்கு சொத்து எவ்வளவு உரிமையோ, அதேபோன்று மகளுக்கும் மகளின் வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்பது சட்டசான்று.

நடந்து கொண்டிருக்கும் குற்றங்களை விசாரித்து நீதி சொல்ல வேண்டிய காவல்துறை தனம்மாவிற்கும் தனம்மாவின் மகள்களுக்கும் ஏற்பட்ட அநீதிக்கு இரு தரப்பினரையும் அழைத்து விசாரிக்க கூட தயாரில்லை போல் தெரிகிறது. இதில் யாருடைய உரிமையை யார் பறிக்க முயற்சித்தாலும் அதற்கு எதிரான சட்டம் நடவடிக்கையைதுரிதப்படுத்துவதற்கோ அல்லது அதனை சரிபடுத்துவதற்கோ காவல்துறைக்கும் பங்கு இருக்கிறது. அதனை காவல்துறை சரியாக செய்ய வேண்டும் என்பதுதான் அனைவரின் எதிர்பார்ப்பாக இருக்க முடியும். காவல்துறையில் கடமையிலிருந்து விலகுமா? அல்லது கடமையை நிறைவேற்றுமா?

---

# இளம் சிறார்களிடையே மிகுதியாகும் குற்றச்செயல்கள்!

சமீபத்தில் 18 வயதிற்கும் குறைவான இளம் சிறார்கள் கொலை குற்றம் உள்பட பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபட்டு வருவதன் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போவது வருங்கால சமூகத்தின் எதிர்காலம் எப்படி ஒரு கொடுமையானதொரு காலமாக அமையும் என்பதை அவரவர் பார்வை மற்றும் மற்றும் கற்பனைக்கே விட்டு விடுவோம்.

வெகு சமீபத்தில் தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி பகுதியில் உள்ள ஒரு சிற்றூராட்சியில் வசிக்கும் 18 வயது நிரம்பிய மாணவன் 24 வயது நிரம்பிய ஒரு இளைஞனை கத்தியால் வயிற்றைக் குத்தி கிழித்து கொலை செய்துள்ளான்.

சென்னை புளியந்தோப்பு பகுதியில் வீண் தகராறு செய்து ஒருவரை கத்தியால் தாக்கிய வழக்கில், இரண்டு சிறுவர்களை போலீசார் பிடித்தனர்.

திருவான்மியூரில் போதை பழக்கத்தையும், பெண்களுடன்உல்லாசமாகஇருந்ததையும்,பெற்றோரிடம் போட்டுக் கொடுத்த பக்கத்து வீட்டில் வசிக்கும் 58 வயது பெண்ணை, 17 வயது சிறுவன் நண்பர்களுடன் சேர்ந்து கழுத்து அறுத்து கொன்றான்.

இப்படி இளம் சிறார்கள் கடந்த முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தற்பொழுது அதிகமான அளவில் குற்றச் செயல்களில் ஈடுபடுவது ஒரு சமூக சுகாதாரம் ஆகாது.

கடந்த 2020ஆம் ஆண்டில் 29,768 குற்ற வழக்குகளில் சிறார்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும், அவ்வழக்குகளில் சம்பந்தப்பட்ட 35,352 சிறார்கள் நடவடிக்கைகள் மீது சட்டரீதியான மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஓர் அறிக்கை தெரிவிக்கிறது.

அவ்வறிக்கையின்படி, 842 கொலை வழக்குகள், 981 கொலை முயற்சி வழக்குகள், 9,287 திருட்டு, களவு, வழிப்பறி மற்றும் கொள்ளை வழக்குகள், 937 பாலியல் வன்கொடுமை வழக்குகள் உள்ளிட்ட பல்வேறு குற்றவழக்குகளில் சிறார்கள் ஈடுபட்டுள்ளனர் என்ற புள்ளி விவரம், சிறார்கள் திசைமாறிப் பயணிக்

கின்றார்களா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கொடுங்குற்ற வழக்குகளில் தமிழ்நாட்டு சிறார்களின் பங்களிப்பு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் இருப்பதாக ஆய்வுகள் வெளிப் படுத்துகின்றன.

தமிழ்நாட்டில் 2016 முதல் 2020 வரையிலான ஆண்டுகளில் முறையே 48,53,75,92,104வழக்குகளில்சிறார்கள் ஈடுபட்டுள்ளனர் என்ற புள்ளிவிவரம் இரண்டு முக்கிய கருத்துகளை வெளிப்படுத்துகிறது.



தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் புள்ளி விபரங்களின்படி, 2022ல் தமிழகத்தில் 3,200க்கும் மேற்பட்ட இளம் வயது குற்றவாளிகள் கொலை, கொலை முயற்சி, வழிப்பறி, ஆபத்தை விளைவிக்கும்வகையில்வாகனங்களை ஓட்டுதல்உள்ளிட்டகுற்றச்சம்பவங்களில்ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஐந்தாண்டுகளில் சிறார்கள் நிகழ்த்திய கொலை வழக்குகளின் எண்ணிக்கை இரண்டு மடங்கிற்கும் சற்று அதிகமாக உயர்ந்துள்ளதும், ஆண்டுதோறும் சிறார்கள் நிகழ்த்திய கொலை வழக்குகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இம்மாதிரியான நிலை கடந்த ஐந்து ஆண்டுகளில் நிகழவில்லை.

தமிழ்நாட்டில் 2019 ஆம் ஆண்டைக்காட்டிலும் 2020 ஆம் ஆண்டில் குறைவான கொலைகள் நிகழ்ந்துள்ளன.

ஆனால்,சிறார்கள்செய்தகொலைகளின்எண்ணிக்கை 20192 ஆண்டைக்காட்டிலும் 2020ஆம் ஆண்டில் கணிசமாக உயர்ந்துள்ளது.

சிறார்கள் மோட்டார் வாகனங்களை இயக்க சட்டம் இடமளிக்காத நிலையில், 20002 ஆண்டில் மோட்டார் வாகனங்களை சிறார்கள் ஓட்டியதால் ஏற்பட்ட விபத்துகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளதும், நம் நாட்டில் விபத்துகளில் தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்கது. சிறார்கள் நிகழ்த்திய 22% விபத்துகள் நிகழ்ந்துள்ளதும்

அதில், சென்னையில் மட்டும், 521 பேர் இளம்வயதினர் குற்றச்சம்பவங்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவர்களை திட்டமிட்டே, போதைக்கு திருப்பி குற்றச்செயலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். குறிப்பாக கொலை வழக்குகளில் சிறார்கள் அதிகம் பயன்படுத்தப்படுவதும் தெரியவந்துள்ளது.

இளம் சிறார்கள் குற்ற எண்ணிக்கையில் தலித் சமுதாயத்தை சார்ந்த இளம் சிறார்கள் 38%மாகவும் மற்ற சமூகத்தை சார்ந்த இளம் சிறார்கள் 21%மாகவும் இருப்பதாகஒருகருத்துக்கணிப்புகூறுகிறது

அரசு மற்றும் தனியார் பள்ளிகள் மற்றும் அருகாமையில், கஞ்சா, போதை ஏற்படுத்தக்கூடிய வலி நிவாரணி மாத்திரை, குட்கா, மாவா, ஹான்ஸ் உள்ளிட்டவை மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இவற்றை தடுக்க, உணவு பாதுகாப்பு துறை, காவல் துறை இணைந்து குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவினரின் செயல்பாடு முறையாகவும், சிறப்பாகவும் இல்லாததால், பள்ளி மாணவர்களிடையே ஏற்படும் போதை பழக்கத்தை தடுக்க முடியவில்லை.

போதைப் பொருட்கள் மட்டும் அல்ல இளம் சிறார்கள் மற்றும் மாணவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலை, பெற்றோர் அரவணைப்பு குறைபாடு, தீய நட்பு, ஒழுக்கமற்ற கல்வி போன்ற காரணிகளும் தற்போதைய இளம் சிறார்களின் குற்ற செயலுக்கு அடிப்படை காரணங்களாக அமைந்துவிடுகிறது எனலாம்.

எனவே சமூகத்தில் நிலவும் இளம் வயதினரை பாதிக்கும் அல்லது அவர்கள் குற்றச் செயலில் ஈடுபட ஊக்குவிக்கும் சூழ்நிலை மற்றும் காரணிகளை களைய அரசு குழு, கண்காணிப்புக்குழு போன்றவற்றை அமைத்தால் மட்டும் போதாது. அதன் செயல்பாடுகள் சிறார்களை சீர்படுத்துவதில் வெற்றி காண வேண்டும்.

வளர்ந்து வரும் இந்த இளம் சிறார்களின் குற்ற செயல்கள் எண்ணிக்கை எதிர்கால சந்ததியினருக்கு ஒரு பேராபத்தாக முடியும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்றே நினைக்கிறோம்.

எனவே அரசுகள் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி நமது எதிர்கால சந்ததியினரை பாதுகாக்க வேண்டியது அவர்களின் கடமையாதலால் மேற்கொண்டு தாமதப்படுத்தாமல் இளம் சிறார்கள் குற்றச் செயல்களை அறவே காணாமல் போக, அதற்கான சிறந்த திட்டங்களை வகுத்து தீவிரமாக செயல்பட வேண்டும் என்ற கருத்தை அரசியல் சூரியன் புலனாய்வு மாத இதழின் சார்பில் முன் வைக்கிறோம்.

# கோவை ஈஷா நவீன எரிவாயு மயான கட்டுமான செயல்பாடுகளை விரைவுபடுத்த கிராம மக்கள் மனு




ஈஷாவில் கட்டப்பட்டு வரும் நவீன எரிவாயு மயானத்திற்கு எதிராக பொய் செய்திகளை பரப்பி, அப்பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் வெளியூர் நபர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈஷாவை சுற்றியுள்ள 6 கிராம மக்கள் கோவை மாவட்ட ஆட்சியரிடம் ஒன்றாக (மே 24) மனு அளித்தனர்.

இது தொடர்பாக அக்கிராம மக்கள் கூறியதாவது:

தாணிக்கண்டி, மடக் காடு, முள்ளாங்காடு, பட்டியார் கோவில்பதி, முட்டத்துயல், செம்மேடு ஆகிய 6 கிராம மக்கள் சார்பாக நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் கோரி க்கை மனுக்களை அளித் துள்ளோம். இதில் 4 கிராமங்கள் பழங்குடி கிராமங்கள் ஆகும்.

எங்கள் கிராமங்களில் சரியான மயான வசதி இல்லாததன் காரணமாக இறந்தவர்களுக்கான இறுதி சடங்குகளை செய்வதற்கு நாங்கள் 20 கி.மீ வரை செல்ல வேண்டி உள்ளது. இதனால், பொருளாதார ரீதியாக பல சிரமங்களை சந்தித்து வருகிறோம். அனைத்து உறவினர்களையும் ஒன்று சேர்த்து செய்யும் சடங்களை செய்வதிலும் சிரமங்களை சந்தித்து வருகிறோம்.

எனவே, எங்கள் கிராமத்திற்கு அருகிலேயே நல்லதொரு மயானம் அமைக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகிறோம். இதற்காக ஒவ்வொரு கிராம மக்களும் தனி தனியாக, மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், பஞ்சாயத்து தலைவர் உள்ளிட்டோரிடம் மனு க்கள் அளித்துள்ளோம்.

இதன் பயனாக, எங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள ஈஷா வளாகத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அவர்களுடைய செலவில், நவீன எரிவாயு மயானம் ஒன்று கட்டுப்பட்டு வரும் செய்தி அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம் என எங்க ளுடைய கிராமங்களுக்கு பல உதவிகளை ஈஷா செய்து வருகிறது. அதன் தொடச்சியாக, இப்போது அரசு அனுமதியுடன் நவீன எரிவாயு மயானமும் கட்டி வருகிறது. இந்த நல்ல செயலுக்கு 6 கிராம மக்களும் முழு ஆதரவு தெரிவித்துள்ளோம். இந்த சூழலில், சிவஞா னம், காமராஜ், சுப்பிரமணியன் மற்றும் இன்னும் சில வெளியூர் நபர்கள், அமைப்புகள் ஈஷாவில் கட்டுப்பட்டு வரும் எரி வாயு மயானப் பணிகளை தடுக்கும் செயல்களில் ஈடுப்பட்டு வருகின்றனர். அவர்கள் எங்கள் கிராமங்களு க்குள் அத்துமீறி நுழை ந்து பொய் செய்திகளை பரப்பி ஊர் அமைதியை சீர்குலைக்கும் செயல்களில் ஈடுப்பட்டு வருகின்றனர். மேலும், அந்த வெளியூர் நபர்கள் சில ஊடகங்களில் ஈஷாவிற்கு எதிராக அவதூறாக பேட்டி யும் அளித்து வருகின்றனர்.

எனவே, எங்கள் கிராம மக்களுக்கு எதிராக செயல்படும் இவர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ஈஷாவில் கட்டப்பட்டு வரும் நவீன எரிவாயு மயானப் பணிகள் எவ்வித இடையூறும் இன்றி விரை ந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியருக்கு அளித்த மனுவில் தெரி வித்துள்ளதாக கூறினர்.

# சொல்லியதை மட்டுமல்ல; சொல்லாததையும் செய்யும் முதல்வர் மு.க.ஸ்டாலின்: தமிழக அரசு பெருமிதம்

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த சிறப்பான திட்டங்களால் மக்களின் வாழ்வாதாரம் உயர்கிறது என்று தமிழக அரசு கூறியுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு:

தமிழ் மக்களின் முன்னேற்ற த்திற்காக முதல்அமைச்சர் மு.க.ஸ்டா லின் புதிய புதிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்ய அகாதமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்றவர்களுக்கு வீடுகள் வழங்கும் கனவு இல்லம் திட்டம்; மக்களுக்கு உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய்க்கான மருந்துகளை இல்லங்களுக்கு சென்று களப் பணியாளர்கள் வழங்கும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் போன்றவை சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கொரோனா காலத்தில் 1 முதல் 8ம் வகுப்பு வரை படித்த மாணவர்களிடம் ஏற்பட்ட கற்றல் இடைவெளியை ஈடு செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ள இல்லம் தேடிக் கல்வி திட்டம்; சாலை விபத்தினால் ஏற்படும் உயிர் இழப்புகளைக் குறைக்கவும், அதனால் குடும்பங்களுக்கு ஏற்படும் மருத்துவச் செலவுகளைக் குறைப்பதற்கும் இன்னுயிர் காப்போம் ஸ்ரீ நம்மைக் காக்கும் 48 என்ற திட்டம்;

கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றும், வேலைக்கேற்ற திறன் இல்லாதவர்களாகக் காணப்படும் இளைஞர்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்கி வேலைவாய்ப்புகளைப் பெற வழிவகுக்கும் நான் முதல்வன் திட்டம் போன்றவை மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துகள் குறைபாடுடைய 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குச் சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் செய்து, மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள் மற்றும் ஊட்டச்சத்து தேவைப்



படும் குழந்தைகள் ஆகியோரைப் பிரித்தறிந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டை நீக்குவதற்கு வழிவகை செய்யும் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்; 1 முதல் 3ம் வகுப்பு வரை பயிலும் 8 வயதிற்கு உட்பட்ட அனைத்து மாணவர்களும் கற்றலின் அடிப்படைகளான வாசித்தல், எழுதுதல், எண்ணறிவு ஆகியவற்றைக் கற்று அதை உறுதிப்படுத்தும் எண்ணும் எழுத்தும் திட்டம்;

2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்னும் ஒரு லட்சிய இலக்கை நிர்ணயித்து, அந்த இலக்கை எய்தும் வகையில் உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் வேலைவாய்ப்புகள் மிகுந்த முதலீடுகளை ஈர்ப்பது என்ற இரு முனை அணுகுமுறைகள் கொண்டுள்ள முதலீட்டாளர்களின் முதல்வரின் முகவரி திட்டம்;

6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில்



செல்வதற்காகத் தொடங்கப்பட்ட மாபெரும் தமிழ்க் கனவுத் திட்டம் போன்றவை இந்த ஆட்சியின் முக்கிய திட்டங்களாக கருதப்படுகின்றன.

2 ஆண்டுகளில் 10 ஆயிரம் கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலைகளை ரூ.4 ஆயிரம் கோடியில் மேம்படுத்தும் முதல்அமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்; தொழில் முதலீட்டில் 35 சதவீதத் தொகையை அரசு மானியமாகவும், 65 சதவீத மூலதன தொகைக்குரிய வங்கிக் கடன் வட்டியில் 6 சதவீத வட்டி மானியமாகவும் அளித்து ஆதிதிராவிட சமுதாய இளைஞர்களையும் மகளிரையும் தொழில் முதலாளிகளாக உயர்த்தும் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டம்;

தமிழக அரசின் திட்டங்களின் பயனாளிகளைத் தொடர்பு கொண்டு, நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறியும் நீங்கள் நலமா? திட்டம்; ஆண்டுக்கு ரூ.200 கோடி வீதம் 5 ஆண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரும் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், சொன்னதை மட்டுமல்லாமல் சொல்லாததையும் செய்வோம் என்று கூறி, நடைமுறைப் படுத்தி வரும் பல்வேறு சிறப்பான திட்டங்களால் தமிழ் நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து, மக்களின் வாழ்வாதாரம் உயர்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டு இருக்கிறது.

பயின்ற மாணவியர், தடையின்றி உயர் கல்வி படிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, கல்லூரிகளில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம்; 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் அரசுத் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாள்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கும் முதல்அமைச்சரின் காலை உணவுத் திட்டம்;

அரசுப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த சமூக அமைப்புகள், பெருந்தொழில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர் ஆகியோருடன் இணைந்து பள்ளிகள் மேம்பாடு அடைவதை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளித் திட்டம்; உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் கட்டிடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கணினி அறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள், குடிநீர் வசதிகளை ஏற்படுத்தும் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்;

தமிழ் மரபின் வளமையையும் பண்பாட்டின் செழுமையையும் சமூகச் சமத்துவத்தையும் பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளையும் இளம் தலைமுறையினரிடையேகொண்டு



# மக்கள் நீதி மய்யம் கட்சியின் எதிர்காலம் என்ன?

தமிழக அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துவேன் என்று சூளுரைத்துக் கொண்டு களம் இறங்கியவர் கமல்ஹாசன். தி.மு.க.,

அ.தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கு மாற்றாக மக்கள் நீதி மய்யம் தமிழக அரசியலில் மாற்று சக்தியாக நிச்சயம் உருவெடுக்கும் என்று கட்சி தொடங்கிய ஆரம்ப கட்டத்தில் கமல்ஹாசன் கூறி வந்தார். கடந்த 2018ம் ஆண்டு மக்கள் நீதி மய்யம் கட்சியை தொடங்கிய கமல்ஹாசன் அடுத்த ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலை சந்தித்தார். இந்த தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை. இருப்பினும் முதல் தேர்தலிலேயே குறிப்பிடத்தக்க அளவில் வாக்கு சதவீதத்தை அந்த கட்சி பெற்றது.

இதைத் தொடர்ந்து 2021 ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலிலும் மக்கள் நீதி மய்யம் கட்சி போட்டியிட்டது. இந்த தேர்தலில் சில கட்சிகளோடு கூட்டணி அமைத்த மக்கள் நீதி மய்யம் 142 இடங்களில் களமிறங்கியது. கோவை தெற்கு தொகுதியில் கமல்ஹாசன் போட்டியிட்டார். அங்கு அதிக வாக்குகளை வாங்கிய அவர் பா.ஜ.க. வேட்பாளரான வானதி சீனிவாசனிடம் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவினார்.

இந்த இரண்டு தேர்தலிலும் கமல்ஹாசனின் தேர்தல் பிரசாரம் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளையும் கடுமையாக சாடும் வகையில் அமைந்திருந்தது.

இது தொடர்பாக அவர் வீடியோக்களையும் வெளியிட்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அதில் கமல்ஹாசன் ஆத்திரத்தில் தொலைக்காட்சி பெட்டியை உடைக்கும் காட்சிகளும் இடம் பெற்று இருந்தன. இப்படி தேர்தல் களத்தில் மிகவும் ஆவேசமாக காணப்பட்ட கமல்ஹாசன் தொடர்ந்து தனித்தே களம் காண்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. கூட்டணி அரசியல் பக்கம் அவர் செல்லமாட்டார் என்று அனைவரும்



எதிர்பார்த்தனர்.

ஆனால் கமல்ஹாசனோ நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியில் இடம் பெற்றார். நீண்ட நெடிய பேச்சுவார்த்தைக்குப் பிறகு அவருக்கு கூட்டணியில் இடம் கிடைத்தது.

ஆனால் போட்டியிடுவதற்கு சீட் கிடைக்க வில்லை. ஒரு மேல் சபை எம்.பி. பதவியை தருவதாக தி.மு.க. தரப்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து கமல்ஹாசன் வரும் நாட்களில் மேல் சபை எம்.பி.யாக டெல்லி செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக வருகிற 2026 ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலிலும் சில இடங்களை பெற்றுக் கொண்டு தி.மு.க. கூட்டணியிலேயே மக்கள் நீதி மய்யம் கட்சி களம் காண உள்ளது.

இப்படி கூட்டணி அரசியலால் மாற்றத்தை நோக்கி பயணித்த மக்கள் நீதி மய்யம் கட்சி திசை மாறி பயணிக்க தொடங்கியுள்ளது.

இதனால் மக்கள் நீதி மய்யம் கட்சியின் எதிர்காலம் என்ன? என்பதும் மிகப்பெரிய கேள்வியாக மாறி இருக்கிறது. தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளில் தி.மு.க., அ.தி.மு.க.வை தவிர மற்ற கட்சிகள் அனைத்துமே இந்த இரண்டு கட்சிகளின் முதுகில் ஏறியே பயணம் மேற்கொள்ள வேண்டியகட்டாயத்தில் உள்ளன.

ஏனென்றால் தனித்துப் போட்டியிட்டால் நிச்சயம் மற்ற கட்சிகளால் வெற்றி பெற முடியாது என்கிற நிலையே காணப்படுகிறது. காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட பல கட்சிகளை இதற்கு உதாரணமாக கூறலாம். மக்கள் நீதி மய்யம் கட்சியும் வருகிற நாட்களில் இந்த கட்சிகளின் வரிசையில் பத்தோடு பதினொன்றாக சேரும் நிலையே ஏற்பட்டுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களை கமல்ஹாசன் நடத்த திட்டமிட்டுள்ளார்.

தி.மு.க. கூட்டணி சார்பில் மேல் சபை எம்.பி.யாக அவர் பதவி வகிக்கும் பட்சத்தில் நிச்சயம் தி.மு.க. கூட்டணியிலேயே பயணிக்க வேண்டிய கட்டாயமும் ஏற்படும். இதனால் தி.மு.க. சார்பில் கொடுக்கும் தொகுதிகளை பெற்றுக் கொண்டு சட்டமன்றத் தேர்தலிலும் தி.மு.க. கூட்டணியிலேயே தொடர வேண்டிய கட்டாயமும் நிர்பந்தமும் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு ஏற்பட்டு உள்ளது. மாற்றத்துக்காக மக்கள் நீதி மய்யம் கட்சியில் இணைந்து பயணித்த அந்தக் கட்சியின் நிர்வாகிகளுக்கு இது ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இரண்டு திராவிட கட்சிகளுக்கும் மாற்றாக கமல்ஹாசன் கட்சியை வளர்த்தெடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவரும் கூட்டணி அரசியலுக்குள் முடங்கிப் போய் இருப்பதாகவே அரசியல் நிபுணர்களும் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். மாற்றத்தை நோக்கி பயணித்த கமல்ஹாசன் கூட்டணி அரசியலுக்குள் சென்றதன் மூலம் இனி அவரது பழைய பயணம் தடைபடும் என்றும் கூட்டணிக்கு தலைமை தாங்கும் கட்சி சொல்வதையே கேட்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர்கள், கருத்துக்களை பதிவிட்டு வருகிறார்கள். இதன் மூலம் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் கமல்ஹாசன் எத்தனை இடங்களை கேட்டு பெறுவார் என்கிற கேள்வி இப்போதே எழத் தொடங்கி உள்ளது.

## மாட்டு தொழுவங்களுக்கு லைசென்ஸ் கட்டாயம்: சென்னை மாநகராட்சி அதிரடி

சமீபகாலமாகவே சென்னையில் சுற்றித்திரியும் நாய்களால், சிறுவர், சிறுமிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.. அதனால்தான், நாய்களை வளர்ப்பது குறித்த விதிமுறைகளை, சென்னை மாநகராட்சி வகுத்து வருகிறது. அத்துடன் சில கட்டுப்பாடுகளையும், அபராதங்களையும் அமல்படுத்தி உள்ளது.

அதுபோலவே, மாடுகள் விஷயத்திலும் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன..

இரவு நேரங்களில், சாலையின் நடுவில் படுத்து கிடக்கும் மாடுகளைக்கண்டு, கனரக வாகனங்கள் திடீரென பிரேக் அடிப்பது. பக்கவாட்டில் செல்வது போன்ற காரணங்களாலும் விபத்துகள் நடக்கின்றன. அதேபோல, பள்ளி, கல்லூரிக்கு செல்வோரும், வேலைக்கு செல்வோரும் பரபரப்புடன் செல்லும்போது, கால்நடைகள் சாலைகளை ஆக்கிரமித்தபடி வலம் வருகின்றன. இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் சில நேரம் விபத்துகளும் ஏற்படுகின்றன.

இதனால் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது.

ஏற்கனவே சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளால் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அதனால்தான், கால்நடைகளை வளர்ப்பவர்களை மாடுகளை உரிய கவனத்துடன் பராமரிக்குமாறு மாநகராட்சி வலியுறுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னையில் மாட்டு தொழுவங்களுக்கு லைசென்ஸ் கட்டாயம் என்ற புதிய விதி இம்மாதம் முதல் அமலுக்கு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் சாலைகளில் மாடுகளும் சுற்றித்திரிவதால் பொதுமக்கள், வாகன ஓட்டிகளை மாடுகள் முட்டி அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன. போதிய இடமும், தொழுவமும் இல்லாமல் வளர்ப்பதால்தான், இப்படி தெருக்களிலும் சாலைகளிலும் சுற்றித்திரிய நேரிடுகிறது. ஆதலால்மாட்டுஉரிமையாளர்கள்மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் விண்ணப்பித்து உரிமம் பெறலாம்.

# ஊத்துக்கோட்டையில் சேதம் அடைந்த பாலம் சீரமைக்கப்படுமா? பொதுமக்கள் கோரிக்கை

ஆந்திர மாநிலம் பிச்சாட்டூரில் ஆரணியாறு அணை உள்ளது. இந்த அணை முழுவதுமாக நிரம்பினால் உபரி நீர் ஆரணி ஆற்றில் திறந்து விடப்படுவது வழக்கம்.

இப்படி திறந்து விடப்படும் தண்ணீர் ராமகிரி, நந்தனம், சுப்பாநாயுடு கண்டிகை, அச்சமநாயுடு கண்டிகை, காரணி, சுருட்டப்பள்ளி ஊத்துக்கோட்டை, பெரியபாளையம் ஆரணி, புதுவாயல் வழியாக பாய்ந்து கடலில் கலக்கிறது. தண்ணீர் வீணாக கடலில் கலப்பதை தவிர்த்து நிலத்தடி நீர்மட்டம் பெருக சுருட்டபள்ளியில் 1950 ம் ஆண்டில் ஆரணி ஆற்றின் குறுக்கே தடுப்பு அணை கட்டப்பட்டது.

இந்த தடுப்பு அணையில் இருந்து ஊத்துக்கோட்டை அருகே அம்பேத்கார் நகரில் உள்ள பொதுப்பணித் துறைக்கு சொந்தமான ஏரிக்கு ஆரணி ஆற்று கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். இப்படி திறந்து விடப் படும் தண்ணீர் அண்ணாநகர், ஊத்துக்கோட்டை வழியாக பாய்ந்து அம்பேத்கர் நகர் ஏரிக்கு செல்லும்.

சுருட்டப்பள்ளி தடுப்பணையில் இருந்து அம்பேத்கர் நகர் ஏரிக்கு தண்ணீர் திறந்து விடும் போதெல்லாம் ஊத்துக்கோட்டை நகர எல்லையில் சக்திவேடு சாலையில் வாகன போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டது.

இதனை கருத்தில் கொண்டு 1953ம் ஆண்டில் ஊத்துக் கோட்டை நகர எல்லையில் சத்தியவேடு சாலையில் சிறிய பாலம் அமைக்கப்பட்டது. இந்தப் பாலம் வழியா கத்தான் ஊத்துக்கோட்டையில் இருந்து ஆந்தி ராவில் உள்ள சத்தியவேடு, தடா, சூலூர்பேட்டை, நெல்லூர், ராக்கெட் ஏவுதளம் அமைந் துள்ள ஸ்ரீஹ ரிகோட்டாவுக்கு வாகன போக்குவரத்து நடைபெ றுகிறது.

குறிப்பாகஇந்தசாலைவழியாகத்தான்சென்னை, ஸ்ரீபெரும்புதூர், ஒரகடத்தில் உள்ள சிப்காட் தொழிற் சாலைகளில் தயாரிக்கப்படும் ராக்கெட் உதிரி பாகங்கள், கனரக வாகனங்கள் மூலம் ஸ்ரீஹ ரிகோட்டாவிற்கு கொண்டு செல்லப்படுகிறது. மேலும் நெல்லூர் சென்னை இடையே தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டால் வாகனங்களை இந்த பாலம் வழியாக ஊத்துக்கோட்டை, திருவள்ளூர், பூந்த மல்லி மற்றும் சுற்றி உள்ள பகுதிகளுக்கு திருப்பி விடப் படும்.

இந்த நிலையில் ஊத்துக்கோட்டையில் உள்ள இந்த பாலம் கடந்த சில மாதங்களாக பழுதடைந்து உள்ளது. இதனால் வாகனங்கள் செல்லும் போது பாலத்தில் கடும் அதிர்வு ஏற்பட்டு வருகிறது. மேலும் இந்த அதிர்வால் பாலத்தில் சில இடத்தில் விரிசல் ஏற்பட்டு இருப்பதாக தெரிகிறது.

இதேபோல் பாலத்தை தாங்கி நிற்கும் தூண்களிலும் லேசாக விரிசல் ஏற்பட்டு உள்ளன. பாலத்தில் உள்ள விரிசல்களில் செடி கொடிகள் வளர்ந்துள்ளன.

கடந்த சில் நாட்களுக்கு முன்னர் பாலத்தின் இடது புறத்தில் மெகா பள்ளம் ஏற்பட்டது. இதனால் சுமார் 8 மணி நேரம் வாகன போக்குவரத்து தடைப்பட்டது. பொது மக்கள் ஒன்று திரண்டு மெகா பள்ளத்தை பாறாங்கற்களை கொண்டு சீரமைத்தனர்.

இதனை கருத்தில் கொண்டு பழுதடைந்த இந்த பாலத்தை அகற்றிவிட்டு புது பாலம் அமை க்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.



# கழிவுகளால் மிதக்கும் ஏரி!

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கரகதஹள்ளி ஊராட்சியில் உள்ளது கடமடை ஏரி. இந்த ஏரி சுமார் 27 ஏக்கர் பரப்பளவு உள்ளது. இந்த ஏரியில் தான் அரசு வனத்துறை அலுவலகம் மற்றும் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் நீரேற்று நிலையம் போன்றவை அமைந்துள்ளன.

இங்கு அமைந்துள்ள சுத்திகரிப்பு மற்றும் நீர் ஏற்ற நிலையத்துக்கு அருகில் தான் முன்னாள் அமைச்சரும் தற்போதைய சட்டமன்ற உறுப்பினருமான கே. பி. அன்பழகன் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு ஒரு திறந்த வெளி குடிநீர்க் கிணறு வெட்டப்பட்டுள்ளது. இந்த கிணற்றில் இருந்து தான் இந்தப் பகுதியில் உள்ள சுமார் 500க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இந்த கிணற்றை சுற்றி ஏராளமான கோழி கழிவுகள், மருத்துவமனை கழிவுகள், பழைய வீடு இடித்து எடுக்கப்படும் கழிவுகள் மற்றும் பல்வேறு வாகன உதிரி பாகங்கள் எரிப்பதால் ஏற்படும் கழிவுப்பொருள்கள் மின்ச மின்சார ஒயர்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் எரித்த பின் வரும் கழிவு பொருட்கள் என ஏராளமான கழிவு பொருட்கள் இந்த ஏரி முழுவதும் கொட்டப்பட்டு உள்ளது.

இதனால் இந்த ஏரியின் பக்கம் சென்றாலே மனிதர்கள் தாங்க முடியாத அளவுக்கு துர்நாற்றமும், நெடியும் வீசுகின்றன. இதனால் காற்று மாசுபடுதல் மட்டுமில்லாமல் இந்தக் கழிவுகளுடன் மழை நீர் கலந்து நிலத்தடியில் ஊறி அப்பகுதியில் உள்ள சுமார் பதினைந்து ஊராட்சியில் உள்ள பொதுமக்களுக்கு செல்லும் குடிநீரில் கலக்கும் அபாயம் மிகுதியாக உள்ளது. அப்பகுதியில் உள்ள திறந்த வெளி கிணற்றின் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரை பயன்படுத்துவதால் சிலருக்கு தோல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள். எனவே மாவட்ட நிர்வாகம் இப்பகுதியில் உள்ள கிணற்றின் நீரை ஆய்வுக்கு உட்படுத்தி அது மனிதர்கள் பயன்படுத்தத்தக்கதா என்பதை உறுதி செய்து பொதுமக்களுக்கு விநியோகிக்க வேண்டும். அல்லது இக்கிணற்றிலிருந்து வினியோகிக்கப்படும் நீரை விநியோகிக்காமல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இல்லையெனில் 27 ஏக்கர் பரப்பளவு உள்ள இந்த ஏரியை கையகப்படுத்தி கழிவுகள் கொட்டுவதை தடுக்கும் வண்ணம் ஏரி முழுவதும் கம்பி வலையால் ஆன தடுப்புகள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். இதன் மூலம் வியாதிகள் பரவுவதை தடுக்க மாவட்ட நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதும் அப்பகுதியில் உள்ள சமூக ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.

இப்பகுதியில் வசிக்கும் சமூக ஆர்வலர் சரவணன் என்பவர் நம்முடைய பேசும்போது இங்குள்ள சமூக விரோதிகள் சிலரால் கொட்டப்படும் பயன்படுத்தப்பட்ட கழிவுகள், பிளாஸ்டிக் மற்றும் கோழி கழிவுகள், இரசாயன உரக்கழிவுகள் போன்றவற்றினால் இங்கு வசிக்கும் பொதுமக்கள் மற்றும் பெண்கள் கர்ப்பிணி பெண்கள் மாணவ மாணவியர்கள் ஆகியோர் மிகப் பெரும் அளவில் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும் இவர்களுக்கு ஏற்பட போகும் எதிர்கால பாதிப்புகள் குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு பலமுறை எடுத்து சொல்லியும் மாவட்ட நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மௌனித்து வருவது மாவட்ட நிர்வாகத்தின் பொதுமக்கள் மீதான பொறுப்பற்ற தன்மையையே காட்டுகிறது இந்த நிலை மாற வேண்டும்மாவட்டநிர்வாகம்உண்மையாகபொதுமக்களின் நலனுக்கான நோக்கத்துடன் செயல்பட வேண்டும் என்று கூறினார்.

மாசு கட்டுப்பாடு வாரியம், உணவு வழங்கல் துறை அலுவலர்கள், தூய்மை பாரத இயக்கம் போன்ற அமைப்புகளை ஒருசேரக் கொண்டிருக்கும் மாவட்ட நிர்வாகம் இப்படி ஒரு சுகாதார அச்சுறுத்தல் நடவடிக்கை மிகுதியாவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது நியாயமல்ல என்பதே நமது கருத்து. இந்த மண்ணுக்கு விரோதமான கழிவுகளை கொண்டு வந்து இங்கு கொட்டுபவர்களில் இந்த கரகத அள்ளி ஊராட்சியின் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் ஒருவர் என்பதுதான் வருத்தமான ஒரு செய்தியாகும். இதுபோன்ற ஆபத்தை விளைவிக்கும் கழிவுப் பொருள்கள் கொட்டுபவர்களை உடனடியாக கலைந்து பொதுமக்களுக்கான சேவையை சிறப்பாக செய்திட மாவட்ட நிர்வாகம் முயற்சி செய்யுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!

# உலக அளவில் முதன்முதலாக உடல் கூறியல் துறையில் பைபர் கிளாஸ் எம்பெட்டிங் முறையை கண்டுபிடித்து தேனி அரசு மருத்துவக் கல்லூரி சாதனை

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள தேனி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது .இங்கு உள்நோயாளிகளாக 1600 பேரும், வெளி நோயாளிகளாக தினந்தோறும் 3000க்கும் மேற்பட்டோர் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். தேனி மாவட்டம் மட்டுமல்லாது, அண்டை மாவட்டங்களில் இருந்தும், கேரளாவில் இருந்தும் ஏராளமான நோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று நலமுடன் சென்று வருகின்றனர்.



பல்வேறு சாதனைகளை மருத்துவக் கல்லூரி பல கட்டங்களில் நிகழ்த்தி வருகிறது. அதில் ஒரு கட்டமாக உடற்கூறியல் துறையில் உடல் உறுப்புகள் மற்றும் அதன் முழு உடலை பாதுகாப்பாக வைக்க பைபர் கிளாஸ் எம்பெட்டிங் என்ற புதிய முறையை உலகிலேயே முதன் முதலில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி உடற்கூறியல் துறையில் துறை தலைவர் மருத்துவர் எழிலரசன் தலைமையிலான மருத்துவர் குழுவினர் அறிமுகப்படுத்தி சாதனை படைத்திருக் கிறார்கள். இதற்கான காப்பு உரிமையும் வேண்டி விண்ணப்பித்துள்ளார்கள்.

இதுகுறித்து மருத்துவ கல்லூரி முதல்வர் பாலசங்கர் தலைமையில்செய்தியாளர்களுக்குபேட்டிஅளிக்கப்பட்டது . அவர் கூறியதாவது உடல் கூறியல் அருங்காட்சியகத்தில் மனித உடல் மற்றும் உடல் உறுப்புகளை பாதுகாக்கும் முறைகளில் இழைக் கண்ணாடியில் பாதுகாக்கப்படுவது என்பது புதிய முயற்சியாகும். பிளாஸ்டினேசன் என்னும் முறை முதல் முதலில் ஜெர்மனியைச் சேர்ந்த கந்தர் என்பவரால் 1977ல் கண்டுபிடிக்கப்பட்டது .இந்தியாவில் ஒரு சில மருத்துவ கல்லூரிகளில் மட்டுமே இம்முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதிலும் அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் அரசு தேனி மருத்துவக் கல்லூரியில் தான் முதல் முறையாக இம்முறை செய்யப்பட்டுள்ளது.

இம்முறை உடல் கூறியல் துறை தலைவரான மருத்துவர் எழிலரசன் என்பவரால் 2012ல் ஆரம்பி க்கப்பட்டது. இப்போது இந்த பிளாஸ்டினேசன் செய்த உடல் உறுப்புகள் மற்றும் அதன் முழு உடலை பாதுகாப்பாக வைக்க ஃபைபர் கிளாஸ் எம்பெட்டிங் என்ற புதிய முறையை உலகில் முதன் முதலில் அரசு தேனி மருத்துவக் கல்லூரி உடற்கூறியியல் துறையில் அறிமுகப்படுத்தி இருக்கின்றோம். இதற்கு காப்புரிமை வேண்டியும் விண்ணப் பித்துள்ளோம். இம்முறையில் மனித சந்தையில் கிடைக்கும் பிசின் என்ற ரசாயன பொருளை உயர் வெப்பத்தில் 100 டிகிரி பிளாஸ்டினேசன் செய்யப் பட்ட உடல் மற்றும் உடல் உறுப்புகள் மீது ஊற்றப்பட்டு, மிகவும் குறைவான வெப்பம் (20 டிகிரி சென்டி கிரேட் ) உள்ள அறையில் 24 மணி நேரம் வைத்து, பின் அவைகள் உலர வைக்கப்படுகிறது .இந்த பைபர் கிளாஸ் எம்பெட்டிங் முறையில் தயாரிக்கப்படும் உறுப்புகள் மற்றும் மனித உடல்களை எளிதில் அழிக்க முடியாது. வருட கணக்கில் பாதுகாப் பாக வைக்கலாம். மேலும் இம்முறை சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பானது .பார்மவின் திரவத்தின் பக்க விளைவுகள் எதுவும் மற்றது. உடல் கூறியல் துறை யில் மாணவர்களின் கல்விக்கு உபயோகப்படுத்தலாம்.நோய்க் குறியியல் துறைக்கான மாதிரிகை ளயும் இம்முறையில் பயன்படுத்தலாம் .குறைபாடு உள்ள சிசுக்கள், அறுவை சிகிச்சை செய்யப்பட்ட வேண்டாத மனித உறுப்புகள் ,குறுக்கு வெட்டு மாதிரிகள் போன்றவற்றையும் சம்பந்தப்பட்ட துறைகளில் வைத்து மாணவர்களின் கல்விக்கு உபயோ கப்படுத்தலாம், என்று தெரிவித்தார். இந்த நிகழ்வின் போது மருத்துவ கண் காணிப்பாளர், ஆர் எம் ஓ ,துணை கண்காணிப்பாளர், துறை தலைவர்கள், மருத்துவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்ட புதிய கண்டு பிடிப்பு உடற்பாகங்கள் மற்றும் உடல்களை செய்தியாளர்களுக்கு காட்சிப்படுத்தினார்கள்.

# கீழ்ப்பாக்கத்தில் ரூ.35 கோடி செலவில் 6 மாடியில் 239 படுக்கைகளுடன் நவீன புதிய மனநல காப்பகம்

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி கீழ்ப் பாக்கம் அரசு மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற வருபவர்களுக்குச் சிறந்த மருத்துவச் சேவையை வழங் குவதற்கான நவீன உபகரணங்களுடன்

கூடிய புதிய மனநல மற்றும் நரம்பியல் நிலையத்திற்கான ஒப்புயர்வு மையக் கட்டிடம் ரூபாய் 35 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேரவையில் அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 30.3.2023 அன்று ரூபாய் 35 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாக 24.8.2023 அன்று இக்கட்டிடத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.

புதிய மருத்துவமனைக் கட்டிடம் மொத்தம் 88,039 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் 239 படுக்கை வசதிகளுடன் உலகத் தரத்தில் வடிவமைக் கப்பட்டுஉள்ளது.

தரைத்தளத்தில் கதிரியக்க நோய் கண்டறிதல் பிரிவு, மனநலப் புறநோயாளிகள் பிரிவு நரம்பியல் புறநோயாளி கள் பிரிவு; முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் மூப்பியல் பிரிவு, நரம்பியல் புற நோயாளிகள் பிரிவு, அறிவாற்றல் பழகுமுறை மற்றும் குழந்தைகள் ஆலோ சனை அறை போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள் ளன.

மூன்றாம் தளம் உள்நோயாளிகள் பிரிவு, புலன் உணர்வு அறை, அடிமைத்தன்மை மீட்பு ஆலோசனை அறை, போன்ற வசதிகளுடன் வடிவமைக்கப் பட்டுள்ளது.

4ம் மற்றும் 5ம் தளங்கள் நரம்பியல் பிரிவு மற்றும் குழந்தைகள் பிரிவு போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

6ம் தளத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரண்டு அறுவை சிகிச்சை அரங்குகள் போன்ற வசதிகளும் இடம் பெறும்.

இக்கட்டிடத்தின் அனைத்துத் தளங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பிடம், பொதுக் கழிப்பிடம், இரண்டு மின் தூக்கிகள், இரண்டு படிக்கட்டுகள், சாய்வு தளம், மருத்துவதிரவ ஆக்சிஜன் இணைப்புகள், தீய ணைப்பு உபகரணங்கள் போன்ற அனைத்து வசதிகளும் இடம்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.




தமிழ்நாட்டின் கட்டமைப்புகளை மேம்படுத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி பொதுப்ப ணித்துறையின் மூலம் தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 4,821 கோடியே 55 லட்சம் ரூபாய்ச் செலவில் 941 மருத்துவ துறைச் சார்ந்த புதிய கட் டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமல்லாமல் மருத்துவத் துறை யில் மேலும் பல்வேறு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 5 லட்சம் குடும்பங்களை மேம்படுத்தும் ‘தாயுமானவர் திட்டம்’ இம்மாதம் தொடக்கம்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் ‘நான் முதல்வன் திட்டம்‘ உள்பட பல்வேறு புதிய திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் கடந்த பட்ஜெட் தொடரின் போது தமிழகத்தில் வறுமையை குறைக்கும் விதமாக முதல்வரின் தாயுமானவர் திட்டம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2024–25ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை அப்போது தாக்கல் செய்த நிதியமைச்சர் தங்கம் தென்னரசு இந்த திட்டத்துக்காக ரூ.27,922 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது என்றும் அடுத்த 2 ஆண்டுகளில் இது ஏறக்குறைய 5 லட்சம் ஏழைக்குடும்பங்களை வறுமையில் இருந்து உயர்த்த இந்த திட்டம் உதவும் என்றும் தெரிவித்திருந்தார்.

தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பல சமூக நல திட்டங்களால் வறுமையை குறைப்பதில் மிகச்சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டு வந்தாலும் தாயுமானவர் திட்டம் மூலம் மிகவும் வாடிய நிலையில் வசிக்கும் ஏழை குடும்பங்களை கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றம் அடைய செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த திட்டத்தை அடுத்த மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இதுகுறித்து ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தில் வறுமையை குறைப்பதில் மிகச்சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. இதை அங்கீகரிக்கும் வகையில் மத்திய அரசின் ‘நிதி ஆயோக்‘ சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் மக்களின் சதவீதம் தமிழகத்தில் 2.2 சதவீதம் மட்டுமே என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனாலும் வாடிய நிலையில் வாழும் ஏழை குடும்பங்களை கண்டறிந்து அவர்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்ற அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காகவே முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதரவற்றோர், தனித்து வசிக்கும் முதியோர், பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறப்பு குறைபாடு உடைய குழந்தைகள் உள்ள குடும்பங்கள் என சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்படுவார்கள்.

அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமின்றி, கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, வீடுகள் போன்ற அனைத்து உதவிகளும் வழங்கப்படும். அரசிடம் உள்ள தரவுகள், கள ஆய்வு மக்கள் பங்கேற்புடன் கலந்துரையாடல், கிராம சபை ஆகியவற்றின் வழியாக மாநிலம் முழுவதும் மிகவும் ஏழ்மையில் உள்ள குடும்பங்கள் கண்டறியப்பட உள்ளது. இத்திட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பங்கேற்பு உறுதி செய்யப்படும். அது மட்டுமின்றி முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தில் ஏழை குடும்பங்களை எந்த அடிப்படையில் எவ்வாறு கண்டறிய வேண்டும் என்பது பற்றி ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு பயிற்சியும் அளிக்க இருக்கிறோம்.




அடுத்த மாதம் பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் வந்த பிறகு இந்த திட்டத்துக்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். அதன் பிறகு இந்த திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ரூ.65 கோடியில் நரம்பியல் துறைக்கு ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் புதிய கட்டிடம்

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரையின்படி சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் நரம்பியல் துறைக்கான அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்று மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டசபையில் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பினை விரைந்து செயல்படுத்திடும் பொருட்டு 65 கோடி ரூபாய் அனுமதித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

நரம்பியல் துறைக்கென்று புதிதாக உருவாக்கப்படும் இந்தக் கட்டடம் ஏறத்தாழ 1 லட்சத்து 12 ஆயிரத்து சதுர அடியில் நான்கு தளங்களுடன் 220 படுக்கை வசதிகளோடு பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

கட்டிடத்தின் அனைத்துத் தளங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பிடம், பொது கழிப்பிடம், 4 மின் தூக்கிகள், 2 படிக்கட்டுகள், சாய்வுதளம், மருத்துவ திரவ ஆக்ஸிஜன் இணைப்புகள், தீயணைப்பு உபகரணங்கள் போன்ற பிற வசதிகளுடன் இந்தக் கட்டடம் கட்டப்பட்டு உள்ளது. விரைவில் இது மக்கள் பயன்பாட்டுக்கு வர உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


## இந்திய சிறுவனை கவுரவித்த துபாய் போலீசார்

துபாய்க்கு சுற்றுலா வந்த பயணி ஒருவர் அவரது கைக்கடிகாரத்தை அங்கு தொலைத்துள்ளார். அந்த கடிகாரத்தை இந்தியாவை சேர்ந்த சிறுவன் யூனிஸ் பார்த்துள்ளார். அதை எடுத்துச்சென்று போலீசிடம் ஒப்படைத்தார்.

அந்த பயணி அவரது சொந்த ஊர் திரும்பிய நிலையில், மீண்டும் அவரை தொடர்பு கொண்டு துபாய் போலீசார் கடிகாரத்தைக் கொடுத்துள்ளனர். இதற்கு அந்த பயணி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில், சுற்றுலா காவல்துறை இயக்குநர் பிரிகேடியர் கல்பான் ஒபைத் அல் ஜலாப், துணை லெப்டினன்ட் கர்னல் முகமது அப்துல் ரகுமான், சுற்றுலா துறை தலைவர் கேப்டன் ஷஹாப் அல் சாடி ஆகியோர் இந்திய சிறுவன் யூனிஸை பாராட்டி சான்றிதழ் வழங்கி கவுரவித்தனர்.

இதுதொடர்பான புகைப்படங்களை துபாய் போலீஸ் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளது. அதில், சுற்றுலா பயணியின் தொலைந்த கடிகாரத்தை திருப்பி அளித்த சிறுவனின் நேர்மையை துபாய் போலீஸ் கவுரவிக்கிறது என குறிப்பிட்டுள்ளது.



# சாலையில் கழன்று ஓடிய சக்கரம்: அரசுப் பேருந்துகள் பழுது பார்க்கப்பட்ட லட்சணம் இது தானா?

## அன்புமணி ராமதாஸ் கடும் குற்றச்சாட்டு

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியிலிருந்து வடரங்கம் என்ற கிராமத்தை நோக்கிச் சென்ற தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான நகரப் பேருந்தில் சக்கரம் பனங்காட்டாங்குடி என்ற இடத்தில் கழன்று சாலையில் ஓடியது. முன்புற சக்கரம் இல்லாமல் தடுமாறிய நகரப் பேருந்தை அதன் ஓட்டுனர் சாமர்த்தியமாக செயல்பட்டு நிறுத்தியதால், அதில் பயணம் செய்த 25க்கும் மேற்பட்ட பயணியர் தப்பினார்கள். சக்கரம் தனியாக கழன்று ஓடும் நிலையில் மிகவும் அலட்சியமாக அரசுப் பேருந்துகள் பராமரிக்கப்படுவது கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாடு முழுவதும் அரசுப் பேருந்துகள் பழுதடைவதும், விபத்துகளில் சிக்குவதும் அதிகரித்து வருகிறது. கடந்த மாதம் 24ஆம் தேதி திருச்சியில் திருவரங்கத்தில் இருந்து கே.கே. நகருக்கு சென்று கொண்டிருந்த அரசு நகரப் பேருந்து, வளைவு ஒன்றில் திரும்பும் போது, நடத்துனர் அமர்ந்திருந்த கடைசியில் இருந்து மூன்றாவது இருக்கை கழன்று வெளியில் விழுந்துள்ளது. இருக்கையுடன் நடத்துனரும் வெளியில் தூக்கி வீசப்பட்டார். அதற்கு முன் பிப்ரவரி 6ஆம் தேதி சென்னை அமைந்தகரை பகுதியில் மாநகரப் பேருந்தின் தளம் உடைந்து ஏற்பட்ட ஓட்டை வழியாக பெண் பயணி ஒருவர் சாலையில் விழுந்து காயமடைந்தார்.

அரசுப் பேருந்துகள் பராமரிப்பின்றி மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் இயக்கப்படுவது குறித்து கடந்த ஏப்ரல் 25ஆம் நாள் அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதைத் தொடர்ந்து ஏப்ரல் 26ஆம் தேதி முதல் அரசுப் பேருந்துகள் போர்க்கால அடிப்படையில் பழுது பார்க்கப்பட்டதாகவும், அரசு பேருந்துகளில் இருந்து 17,459 பழுதுகள் கண்டறியப்பட்ட நிலையில் மே 4ஆம் தேதி வரை 13,529 பழுதுகள்




சரி செய்யப்பட்டதாகவும், மீதமுள்ள பழுதுகள் மே 6ஆம் தேதிக்குள் சரி செய்யப்பட்டு விட்டதாகவும் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் அறிவித்திருந்தன.

ஆனால், அதன்பின் 10 நாட்கள் கூட ஆகாத நிலையில், அரசுப் பேருந்தின் முன்பக்க சக்கரம் தனியாக கழன்று ஓடுகிறது என்றால் அரசுப் பேருந்துகள் பெயரளவில் தான் பழுது நீக்கப்பட்டனவா? என்ற வினா எழுகிறது.

அரசுப் பேருந்துகளை எதுவுமே செய்யாமல் பழுது நீக்கி விட்டதாக கணக்கு காட்டுவதும், பேருந்துக்கு வண்ணம் பூசி விட்டு புதுப்பிக்கப்பட்டு விட்டதாகவும் பொய்க் கணக்கு காட்டும் வழக்கம் தவிர்க்கப்பட வேண்டும். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள 6 ஆண்டுகளைக் கடந்த பேருந்துகள் அனைத்தும் உடனடியாக மாற்றப்பட்டு அவற்றுக்கு மாற்றாக புதிய பேருந்துகள் வாங்கி இயக்கப்பட வேண்டும். பழைய பேருந்துகள் அனைத்தும் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். அதற்காகவும், உதிரி பாகங்கள் வாங்கவும் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கிறிஸ்தவ ஆலய சொத்து: பதிவுத்துறை சட்டத்தின் கீழ் கொண்டுவரும் நேரம் வந்துவிட்டது: மதுரை ஐகோர்ட்டு

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரைச் சேர்ந்த ஷாலின், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "கடந்த ஆண்டு விஜயா என்பவரிடம் இருந்து சொத்து கிரையம் செய்தேன்.

அந்த சொத்தை பதிவு செய்ய திருப்பத்தூர் சார்பதி வாளர் மறுத்துவிட்டார். இது தொடர்பாக சார்பதிவாளர் 29.3.2023 அன்று பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து, நான் வாங்கிய சொத்தை உடனடியாக பத்திரப்பதிவு செய்யும்படி உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார். இந்த மனு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது திருப்பத்தூர் சார்பதிவாளர் தாக்கல் செய்த பதில் மனுவில், 2017ம் ஆண்டில் 2 வழக்குகளை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு, தமிழ் இவாஞ்சலிக்கல் லூத்தரன் சர்ச் (டி.இ.எல்.சி.) சொத்துகளை ஐகோர்ட்டு அனுமதி இல்லாமல் பத்திரப்பதிவு செய்யக்கூடாது என உத்தரவிட்டது. இது தொடர்பாக பதிவுத்துறை ஐ.ஜி. சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அதன் அடிப்படையில் மனுதாரரின் சொத்து பதிவு மனு நிராகரிக்கப்பட்டது" என கூறப்பட்டு இருந்தது.

விசாரணை முடிவில் நீதிபதி பிறப்பித்த உத்தரவில், "தமிழில் `சிவன் சொத்து குலநாசம்' என்பார்கள். அதாவது `கோவில் சொத்துக்களை அபகரித்தால் குடும்பம் அழிந்துவிடும்' என்பது அதன் அர்த்தம். இந்து, முஸ்லிம் மதங்களின் சட்டப்படியான சொத்துக்களை பதிவுத் துறை சட்டம் பாதுகாக்கிறது. அந்த பதிவுத்துறை சட்டத்தில் கிறிஸ்தவ ஆலய சொத்துக்கள் சேர்க்கப்பட வில்லை. கோவில் சொத்துகள் இந்து சமய அறநிலையத் துறை சட்டப்படியும், வக்பு வாரிய சொத்துகள் வக்புவாரிய சட்டப்படியும் பாதுகாக்கப்படுகின்றன. கிறிஸ்தவ ஆலய சொத்துகளை பொறுத்தவரை இதுபோன்ற சட்டம் இல்லாதது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

இந்தியா மதசார்பற்ற நாடு என்பதால் அனைத்து மதங்களையும் சமமாக அணுக வேண்டும். இதனால் கிறிஸ்தவ ஆலய சொத்துகளை பதிவுத்துறை சட்டம் 22ஏ பிரிவின் கீழ் கொண்டு வருவதற்கான நேரம் வந்துவிட்டது.

டி.இ.எல்.சி. சொத்து வழக்கில் பிரதான வழக்கு வாபஸ் பெறப்பட்டு உள்ளது. இதனால் அதுதொடர்பான வழக்கின் இடைக்கால உத்தரவுக்குஉயிர்இல்லை. எனவே தற்போது டி.இ.எல்.சி. சொத்துகளை பொறுத்தவரை பத்திரப்பதிவு செய்ய எந்த தடையும் இல்லை. மனுதாரர் சொத்தை பதிவு செய்ய மறுத்த திருப்பத்தூர் சார்பதிவாளரின் உத்தரவு ரத்து செய்யப்படுகிறது" என்று நீதிபதி தனது உத்தரவில் கூறியுள்ளார்.



# தி.மு.க. ஆட்சியில் தொழில் துறையின் வளர்ச்சி சீரழிந்துக் கொண்டிருக்கின்றது: ஓ.பன்னீர்செல்வம்

தமிழக முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தொழில்கள் வளர வேண்டும், தொழிலாளர்கள் வாழ வேண்டுமென்ற அடிப்படையில் ஓர் அரசு செயல்படுமே யானால், உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் அரசாங்கத் திற்கான வருவாய் பெருகி நாட்டின் பொருளா தாரம் வளர்ச்சியடையும். ஆனால், கடந்த மூன்று ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் தொழில் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சி சீரழிந்துக் கொண்டிருக்கின்றது.



'தொழில் நிறுவன ங்களை நலிவிலிருந்து மீட்போம்' என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க., ஆட்சிக்கு வந்த பிறகு தொழில் நிறுவனங்களை நசுக்கும் பணியை செய்து வருகிறது. மின் கட்டண உயர்வு, நிலைக் கட்டண உயர்வு, உச்ச நேர மின் கட்ட ணம், மேற்கூரை சூரியசக்திக்கான மின் கட்டணம் போன் றவற்றை உயர்த்தி, தொழிலையே மேற்கொள்ள முடியாத அளவுக்கு தொழில் முனைவோரையும், தொழிலாளர்க ளையும் வஞ்சித்து வருகின்ற அரசாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில், எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றும் விதமாக, வெளிச் சந்தையில் இருந்து மின்சாரம் பெற்று வரும் தொழில் துறையினருக்கு, ஒரு யூனிட் மின்சாரத் திற்கு 34 காசு மேல்வரி (சர்சார்ஜ்) விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது தொழில் துறையினருக்கு பேரதிர்ச்சியை அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் உயரழுத்தப் பிரிவில் இடம் பெறும் தொழிற் சாலைகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர் மானக் கழகத்திடமிருந்து மட்டுமல்லாமல், வெளிச் சந் தையிலிருந்தும் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது. வெளிச் சந்தை மின்சாரத்தை எடுத்துவர தமிழ்நாடு மின்சார வாரி யத்தின் வழித்தடம் பயன்படுத்தப்படுவதால், அதற்கான கட்டணத்தை தொழில் நிறுவனங்கள் செலுத்த வேண் டும்.

இதன்படி, யூனிட் ஒன்றிற்கு ஒரு ரூபாய் 96 காசுகள் செலுத்தப்படுகிறது. இந்த நிலையில், ஒரு யூனிட்டிற்கு 34 காசுகள் மேல் வரி வசூலிக்க தமிழ்நாடு மின்சார வாரியம் முடிவு செய்துள்ளதாகவும்,

இதற்கான அனுமதியை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் கோரியுள்ள தாகவும் செய்தி வந்துள்ளது.

ஏற்கெனவே ஆண்டுதோறும் மின் கட்டணம் உயர்த்தப்படுவதன் காரணமாக தொழில் நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தி.மு.க. அரசின் மேல் வரி நடவடிக்கை என்பது தொழில் துறையை நசுக்குவதற்குச் சமம். இதுதான் தொழில் துறையை நலிவிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கையா?.

ஒருவேளை வாக்குறுதிக்கு முரணாக செயல்படுவ துதான் 'திராவிட மாடல்' போலும்.

இதனை தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்துமேயானால், தொழில் துறை நலிந்துவிடுவது மட்டுமல்லாமல், தொழிலாளர்களுக்கும் வேலை பறிபோகும் சூழ்நிலை உருவாகும்.

இது தவிர, அரசாங்கத்தின் வருமானமும் குறையக்கூடும்.

எனவே, முதல்அமைச்சர் அவர்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு, தொழில் துறையினரின் நலனையும், தொழி லாளர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, மின்சா ரத்தை வெளிச்சந்தையிலிருந்து பெறும் நிறுவனங்கள் மீது கூடுதலாக 34 காசுகள் மேல்வரி விதிப்பதை கைவிட வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பங்குச்சந்தையில் 10ல் 9 பேருக்கு நஷ்டம்: முதலீட்டாளர்களுக்கு எச்சரிக்கை

மும்பை பங்குச்சந்தை நடத்திய ViksitBharat 2047 கூட்டத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசிய போது ரீடைல் முதலீட்டாளர்களுக்கு பெரும் எச்சரிக்கை விடுத்தார்.

நாட்டு மக்கள் அதிகளவில் டெரிவேட்டிவ் சந்தையில் முதலீடு செய்ய துவங்கியுள்ள நிலையில், இதில் தொடர்புடைய ஆபத்துகள் குறித்து சில்லறை முதலீட்டாளர்களை எச்சரித்துள்ளார். பியூச்சர் மற்றும் ஆப்ஷன்ஸ் டிரேடிங்ல் (எஃப்–ஓ) கணிக்கப்படாத பாதிப்பு ஏற்படும் போது ரீடைல் முதலீட்டாளர்களின் குடும்ப சேமிப்பில் சிக்கல்களை உருவாக்கக்கூடும் என்று எச்சரித்துள்ளார்.

இதே ViksitBharat 2047 கூட்டத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வி தற்போது இந்தியா முழுவதும் டிரெண்டிங் ஆகியுள்ளது. இந்த நிகழ்ச்சியில் நிர்மலா சீதாராமனிடம் ஒருவர் பங்குச் சந்தை ப்ரோக்கர்களை காட்டிலும் மத்திய அரசு ஜிஎஸ்டி, எஸ்டிடி என வரி மற்றும் கட்டணங்கள் மூலம் அதிகப்படியாக சம்பாதிக்கிறது என்றும், மத்திய அரசு ஸ்லீப்பிங் பார்ட்னராகவும், ப்ரோக்கரேஜ் நிறுவனங்கள் வொர்க்கிங் பார்ட்னராகவும் இயங்குவதாக தெரிவித்தார்.

இதேபோல் ரியல் எஸ்டேட் துறையில் பணமாக பரிவர்த்தனை செய்ய கூடாது என சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர், என்னுடைய வங்கி கணக்கில் இருக்கும் பணத்தில் (வரி செலுத்தப்பட்டு பின்பு வைத்திருக்க கூடிய பணம்) வீடு வாங்கினால் மும்பை போன்ற நகரங்களில் 11 சதவீத வரி, ஜிஎஸ்டி, ஸ்டாம்ப் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. இப்படியிருக்கும் வேளையில் எங்களை போன்ற ப்ரோக்கரேஜ்களுக்கு எப்படி உதவுவீர்கள்? என கேட்டதற்கு நிர்மலா சீதாராமன் பதில் பேச முடியாமல் திணறியது மட்டும் அல்லாமல் ஸ்லீப்பிங் பார்ட்னர் இந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு பதில் கூறமாட்டார் என சிரித்துக்கொண்டே பேசிய வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

பியூச்சர்ஸ் அண்ட் ஆப்ஷன் வர்த்தகம் குறித்து நிர்மலா சீதாராமன் பேசுகையில் “எப்–ஓ ரீடைல் வர்த்தகத்தில் சரிபார்க்கப்படாமல் செய்யப்படும் முதலீடுகளில் ஏற்படும் பாதிப்பு மிகவும் அதிகமாக இருக்கும் காரணத்தால், இது பங்குச் சந்தை முதலீட்டுக்கு மட்டுமல்ல (ஆனால்) முதலீட்டாளர் உணர்வுக்கும் மற்றும் குடும்பத்தின் சேமிப்புகளுக்கும் மோசமான சவால்களை உருவாக்கலாம்“ என்று நிதியமைச்சர் கூறினார்.

“குடும்ப சேமிப்பு ஒரு தலைமுறையை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.” என்றும் நிர்மலா சீதாராமன் கூறினார். அதே நேரத்தில் எப்–ஓ ரீடைல் வர்த்தகத்தில் இருக்கும் ஆபத்துக்களை களைந்து முதலீட்டாளர்களின் நலனை பாதுகாக்க பங்குச்சந்தை எக்ஸ்சேஞ்சுகளான NSE, BSE மற்றும் சந்தைக் கட்டுப்பாட்டாளரான Sebi ஆகியவை இணைந்து பணியாற்றவும், உறுதியான வர்த்தக இணக்கம் மற்றும் ஒழுங்குமுறை கட்டுப்பாடுகளை கொண்டுவர வலியுறுத்தினார்.

பிஎஸ்இ மற்றும் என்எஸ்இ ஆகியவை எப்–ஓ ரீடைல் வர்த்தகத்தில் இருக்கும் அபாயத்தைத் தணிக்க வேண்டும், சந்தை ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நிர்மலா சீதாராமன் கூறினார். மேலும் செபி மேற்கொண்ட ஆய்வில், 10 சில்லறை முதலீட்டாளர்களில் 9 பேர் எப்–ஓ சந்தையில் தங்கள் முதலீடுகளில் இழப்பை சந்திக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது.

# பட்டியல் இனத்தைச் சார்ந்த துரை ராமச்சந்திரன் தன் நிலத்தை மீட்டு தரவும் தன் இனத்தை கேவலப்படுத்திய நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி கோரிக்கை மனு



சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பட்டியல் இனத்தைச் சார்ந்த துரை ராமச்சந்திரன் தன் நிலத்தை மீட்டு தரவும் தன் இனத்தை கேவலப்படுத்திய நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி கோரிக்கை மனு மாவட்ட ஆட்சியரகத்தில் அளித்தார்.அதில் அவர் தெரிவித்ததாவது சேலம் மாமாங்கத்தை சேர்ந்த துரை ராமச்சந்திரன் ஆகிய நான் பட்டியல் இணையத்தை சார்ந்தவன்.அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்து வராக பணிபுரியும் சம்பத்குமார் என்பவரிடம் 17 லட்சம் கடனாக பெற்றதாகவும் இதற்கு மாத வட்டியையும் அவருக்கு செலுத்தி வந்ததாகவும் அதனை எங்களுக்கு ஒரு நோட்டு புத்தகத்தில் அவர் குறித்தும் கொடுத்துள் ளார்.மேற்கண்ட இந்த கடன் தொகைக்கு ஈடாக எங்க ளிடமிருந்து 5502 சதுரஅடி உள்ள காலி மனையை சம்பத்குமார் என்பவர் அவரது மனைவி காமதேனு என்ப வரின் பெயருக்கு ஒரு அடமான கடன் பத்திரத்தின் மூலம் அவர் எழுதி பதிவு செய்து பெற்றுக் கொண்டார்.

எனது உடன் பிறந்த சகோதரி நீலவேணி என்பவர் கையொப்பம் இட மறுத்து விட்டார். இந்த கடன் தொகையை திருப்பி தரும் பட்சத்தில் சொத்தினை எங் களுக்கே திரும்ப ஒப்படைத்து விடுவதாக எங்களை நம் பவைத்து,இந்த ஆவணத்தில் நாங்கள் கையொப்பமிட நேர்ந்தது. என்றாலும் சொத்தின் சுவாதீனமானது தற்போது வரை எங்களிடம் தான் தொடர்ந்து இருந்து வருகிறது. நாங்கள் கிரையம் செய்து கொடுத்ததாக கிரைய ஆவணத்தை தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்.இந்தக் கிரைய ஆவணத்தில் கூட எனது உடன் பிறந்த சகோதரியான நீலவேணி என்பவர் கையொப்பம் இட மறுத்துவிட்டார். என்றாலும் முன்னர் போலவே சொத்தின் சுவாதினமானது தற்போது வரை எங்களிடம் தான் தொடர்ந்து இருந்து வருகிறது.இவ்வாறான நிலையில் மேற்கண்ட எங்களின் சொத்து உள்ள இடத்தில் நான் இருந்தேன்.அப்போது அங்கு எனக்கு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத மூன்று பேர் வந்தனர்.அவ்வாறு வந்த அவர்களின் ஒருவர் என்னை பார்த்து நீ தான் துரையோ என்று என்னிடம் கேட்டார்.அதற்கு நான் ஆமாம் என்று அவரிடம் சொன் னேன்.அதற்கு என் ஜாதியை இழிவாக கொச்சைப்படுத்தி பேசி எனக்கு கொலை மிரட்டல் விடுத்தனர். நீ உடனடி யாக காலி செய்து மனையை ஒப்படைக்க வேண்டும் என்று மிரட்டி சென்றனர்.

எனவே இந்து பட்டியல் இனத்தைச் சார்ந்த எங்களின் தொடர் சுவாதீன அனுபவத்தில் உள்ள எங்கள் சொத் தினை எங்களை நம்ப வைத்து கிரயம் செய்து பதிவு செய்து கொண்டும் தற்போது அதனை ரத்து செய்ய மறுத்து சொத்தினை அபகரிக்க முயற்சித்தும் அடியாட்களை தூண்டிவிட்டு எங்களின் சாதி பெயரை சொல்லி கொச்சையாக திட்டி அவமானப்படுத்தி கொலை மிரட்டலும் செய்து அச்சுறுத்தும் சம்பத்குமார் என்பவர் மீதும் இவரது மனைவியான காமதேனு என்பவர் மீதும் அத்துடன் இவர்களின் அடி ஆட்கள் மீதும் பட்டியல் இனத் தவருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து நீதி நல்கிட வேண்டும் என்று கோரிக்கை மனுவில் தெரிவித்து இருந்தார்.


**விளம்பர கட்டணம்**

| விவரம் | பின்பக்க அட்டை வண்ணம் | உள் அட்டை வண்ணம் | இதழ் உள்ளே கருப்பு வெள்ளை |
|---|---|---|---|
| முழு பக்கம் | ரூ.20,000 | ரூ.15,000 | ரூ.5,000 |
| அரை பக்கம் | ரூ.10,000 | ரூ.7,500 | ரூ.2,500 |

# Investment of Rs. 1 lakh 40 thousand crores... Dravida model government has made a record in green hydrogen production!



To facilitate delivery of RE for Green Hydrogen production, various policy provisions including inter-alia waiver of Inter-state transmission charges for renewable energy used for Green Hydrogen production; facilitating renewable energy banking; and time bound grant of Open Access and connectivity, will be extended for Green Hydrogen projects.

The Tamil Nadu government has attracted investments to the tune of one lakh 40 thousand crore rupees to make Tamil Nadu a national green hydrogen production hub.

In an interview to The Times Of India, Industries Minister T. R. P. Raja said that the Tamil Nadu government has attracted investments of Rs. The main details of the interview given by him are as follows:-

Due to climate change, countries around the world are focusing on the use of green hydrogen. The demand for green hydrogen, which is considered as an environmentally friendly clean energy, is likely to increase manifold in the future.

As far as India is concerned, there is a fierce competition between the states of Tamil Nadu, Gujarat, Karnataka and Odisha in the production of green hydrogen. In this context, last February, Prime Minister Modi inaugurated the Green Hydrogen Production Center at VUC Port in Thoothukudi.

Meanwhile, the Dravidian model government led by Chief Minister M.K.Stalin is taking steps to turn Tamil Nadu into a green hydrogen production hub at the national level. The Tamil Nadu government has attracted investments to the tune of one lakh 40 thousand crore rupees for the production of green hydrogen.

Industries Minister T. R. P. Raja has said that the Dravidian model government is developing infrastructure facilities for Tamil Nadu in the financial year 2026-27 with the aim of becoming the leading state in green hydrogen production.

He also said that 50 lakh tonnes of green hydrogen should be produced and supplied to the country by 2030. Therefore, more attention is being paid to the green hydrogen project. Meanwhile, construction of a 60 million liter seawater desalination plant per day is underway in Tuticorin district.

Efforts have also been initiated to establish power distribution system through micro, small and medium enterprises. Since green hydrogen production is a challenging project, there is a need to set up solar energy or wind power plants close to the port. For this, the country's second largest wind farm with a power generation capacity of 4.2 MW is being installed at Tirunelveli by Brazil.

Apart from this, work is underway to gradually increase the capacity of 40 KW wind turbines to 60 KW. It is predicted that the economy of Tamil Nadu will grow rapidly through the green hydrogen project with an investment of 1 lakh 40 thousand crore rupees.

IIT Chennai is also collaborating with the Tamil Nadu government on hydrogen fuel technology. The Tamil Nadu government will get opportunities to export hydrogen to South Asian countries through the green hydrogen production project. Currently, the cost of green hydrogen is four times higher than that of gray hydrogen.

At this stage, there is no doubt that Tamil Nadu will be the leader in the production and export of green hydrogen when the demand for these increases in the future.

Owned, Published & Printed by **K.MANIKANDAN** on Behalf of: M/s. Arasiyal Suriyan Monthly, Printed At **SEAMAN GRAPHICS** No.7/253, KVN Puram, 2nd Street, Kilpauk Garden, Chennai-600 010. and published from: 98/1, Vijayamangalam Road, Hospital Road, Uttukuli, Tiruppur-638751. Editor: **K.MANIKANDAN**, Mobile:90253 05909. Mail ID:arasiyalsuriyan77@gmail.com

## வாழ்க வளமுடன்






# SPT ASSOCIATES

K.சரவணன்



94871 24791
98651 24792

# ஓம் சரவணபவ சஷ்டி எஸ்டேட்

ஆபிஸ்: 45-13, பள்ளிப்பாளையம் ரோடு,
சார்பதிவாளர் அலுவலகம் அருகில்,
B.குமாரபாளையம் - 638 183. நாமக்கல் மாவட்டம்.

Arasiyal Suriyan, Tamil, English Monthly Registed with the Registar of Newspapers for India. JUNE 2024. RNI No: TNBIL/2022/83024.

# கலைஞர் ஒரு சகாப்தம்: 101வது பிறந்த நாள்

ஐந்து முறை ஆண்ட ஐந்திணையே! உமக்கு
எமது பிறந்தநாள் வணக்கம்!!

ஜூன் மூன்றாம் தேதியானால் முத்தமிழே!
உன்னை
முத்தமிட மறப்பதில்லை எமது பேனாக்கள்!!

சந்தனத்தை எரித்த சாம்பலும் மணப்பது போல்!
எம்மை விட்டு நீங்கியபோதும் உன் நீங்காத நினைவலைகளின் வாசத்தோடு நாங்கள்!!

எம்நெஞ்சில் நீங்காத இடம் பிடித்த அஞ்சுகம்
ஈன்றெடுத்த நெஞ்சுக்கு நீதியே!

ஓயாமல் கடிதம் எழுதி!
உடன்பிறப்பை உயர்த்திச் செல்ல
உன்னால் மட்டும் எப்படி முடிந்தது?

குறளோவியமெனும்
அழகோவியமே!
கடற்கரையில்
உறங்கும் எமதுயிரோவியமே!!

நீலத் திரைக்கடல் ஓரத்திலே!
உறங்கும் உன் வாசனை
தலைமைச் செயலகத்திலும்
அறிவாலயத்திலும் நீட்சியுற்று
இன்னும் நிலைத்து கொண்டுள்ளது!

இன்னும் எமது காதோரம்
ஒட்டிக் கொண்டும், ஒலித்துக் கொண்டும்
"உடன்பிறப்பே" என்ற ஒற்றை வார்த்தை!

திராவிட நல்லாட்சி தொடர
அடுத்த அரியணைக்கும்
ஆசியைக் கேட்கின்றோம்!

திரைகடல் தென்றலின் தாலாட்டில்
தன்னை மறந்து தூங்கும்
மறையாத சூரியனே!
உமக்கு எம் முதல் வணக்கம்!!

இவண்
அரசியல் சூரியன் செய்தி குழுமம்

